## சேலம் மாநகராட்சி

**2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் அவசரக்கூட்டம் நடைபெறும்.**

---

### பொருள்கள்

**1)** சேலம் மாநகராட்சி 2023–24–ஆம் ஆண்டு SFC பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண் 41 இல் பாவடி துவக்கப்பள்ளியில் கட்டிட பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு 2023–24 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண் 25739 / 2023 / SS2 நாள்: 26–10–2023 இல் உரிய நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு 24–11–2023 இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டு, மதிப்பீட்டு தொகைக்கு 0.07% குறைவு என வரப்பெற்ற M/s Selvam Infrastructures, ஒப்பந்ததாரர், சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.20,29,026.00/–ஐ ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 495 நாள்: 26–12–2023 இல் ஒப்புக்கொள்ளப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டது.

மேற்படி, பழுது மற்றும் பராமரிப்பு பணி நடைபெறும் பொழுது பணி நடைபெறும் கட்டுமானத்தில் தளஅளவுகளின் மாற்றங்கள் காரணமாக சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அது குறித்து ஆணையாளர், மற்றும் மாநகர பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின்படி மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் அளவு பணிகளும், சில இனங்கள் கூடுதலாகவும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட்ட அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| அ | **மதிப்பீட்டில் உள்ள இனங்கள்** | | | | | |
| 1. | Chipping the Damaged Ceiling Plastering | 25.00 | 202.00 | 26.71 | 213.68 | 11.68 |
| 2. | Dismantling the Damaged Pressed tiles & Weathering Course over Roof | 122.00 | 5,355.00 | 511.08 | 21,976.44 | 16621.44 |
| 3 | Manufacturing, supplying & fixing in position Steel windows of MS sheet 20 gauge thick | 9.00 | 29,126.00 | 15.26 | 49,381.36 | 20255.36 |
| 4 | Finishing the top with Solar Reflective Ceramic Tiles of size 300 mm x 300mm x 7mm size laid in cm 1:3 | 131.00 | 131,066.00 | 448.21 | 448,210.00 | 317144.00 |
| 5 | Special Ceiling Plastering with cement mortar 1:3 mix 10mm thick | 24.00 | 7,158.00 | 24.61 | 7,333.78 | 175.78 |
| 6 | Flooring with first quality plain ceramic tiles | 5.00 | 5,212.00 | 17.10 | 17,818.20 | 12606.20 |
| 7 | Painting two coats with ready mixed plastic emulsion paint | 1,920.00 | 461,414.00 | 1,976.49 | 474,357.60 | 12943.60 |
| 8 | Supply and Fixing of the Following Pipes and Specials etc., Complete. | | | | | |
| a | 110mm Dia PVC Pipe | 24.00 | 6,595.00 | 24.50 | 6,713.00 | 118.00 |
| b | 110mm Dia PVC Clamp | 32.00 | 640.00 | 35.00 | 700.00 | 60.00 |
| | **Total** | | **646768.00** | | **1026704.06** | **379936.06** |

தொடர்ச்சி..

| ஆ | கூடுதல் இனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | Plain cement concrete 1:2:4 mix using 20mm metal | | | 40.88 | 257,727.14 | 257,727.14 |
| 2 | Chipping of roughening the surface | | | 473.77 | 17,373.15 | 17,373.15 |
| 3 | Flooring with Stain free Nano polish Vitrified flooring tiles of size 600 x 600 x 8mm of approved colour and quality | | | 486.54 | 717,427.56 | 717,427.56 |
| 4 | Painting two coats enamel paint for Old Wood works | | | 45.79 | 7,089.67 | 7,089.67 |
| 5 | Removing the Damaged Doors and Windows including removal of frames | | | 19.67 | 2,743.97 | 2,743.97 |
| | **Total** | | | | **1,002,361.48** | **1,002,361.48** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : | | **646768.00** | | **1026704.06** | **379936.06** |
| 2 | மதிப்பீட்டில் இல்லாத இனங்கள்: | | | | **1002361.48** | **1002361.48** |
| | Total | | **646768.00** | | **2029065.54** | **1382297.54** |

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2023–2024** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டது. மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் **2023–24** ஆம் ஆண்டு பொது பணி துறையின் செந்தார விலைவிகிதப்பட்டியல் படி செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் M/s Selvam Infrastructures, சேலம். என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**25.00** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான செலவுத் தொகை ரூ. **1382297.54**/–னை, M/s Selvam Infrastructures, சேலம் அவர்களுக்கு வழங்கவும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est. No. 261 / 2023 – 2024)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

2) சேலம் மாநகராட்சி **2023-24-**ஆம் ஆண்டு SFC பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண் **32** இல் கார் தெருவில் இயங்கி வரும் மாநகராட்சி பள்ளி கட்டிடத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு **2023-24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**65.00** இலட்சத்திற்கு **24-11-2023** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு **0.07%** குறைவு என வரப்பெற்ற M/s Selvam Infrastructures, ஒப்பந்ததாரர், சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**52,80,246.60/-**ஐ ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டு, சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் **495** நாள்: **26-12-2023** இல் பதிவு செய்யப்பட்டது. தற்போது பணி முடிக்கப்பட்டது.

மேற்படி, பழுது மற்றும் பராமரிப்பு பணி நடைபெறும் பொழுது பணி நடைபெறும் கட்டுமானத்தில் தளஅளவுகளின் மாற்றங்கள் காரணமாக சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அது குறித்து ஆணையாளர், மற்றும் மாநகர பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின்படி மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் அளவு பணிகளும், சில இனங்கள் கூடுதலாகவும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட்ட அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| அ | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் | | | | | |
| 1. | Providing two legged Scaffolding using 15cm dia casurainas post etc, complete. | | | | | |
| a | Cost of 1 Rm of every additional height of 2.50m over the initial ht of 3m | 275.00 | 116690.75 | 346.49 | 146911.76 | 30221.01 |
| 2 | Clean Removal of Cement Plaster from walls and Sacking out joints etc, complete. | 487.00 | 4967.40 | 911.10 | 9111.00 | 4143.60 |
| 3 | Scraping and Removing Old Paint from Structural Steel by manual labours etc, complete. | 440.00 | 4004.00 | 585.21 | 5266.89 | 1262.89 |
| 4 | Dismantling the Damaged Doors and Windows including removal of frames, Hinges etc, complete. | 63.00 | 8794.80 | 93.80 | 13085.10 | 4290.30 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | Fabricating and Supplying and erecting the required number of trusses with Structural steel etc, complete. | 0.99 | 129848.40 | 3.34 | 438074.40 | 308226.00 |
| 6 | Supplying and laying of Galvolume Sheet 0.47mm thick of approved quality for roofing etc, complete. | 63.00 | 62433.00 | 123.42 | 122309.22 | 59876.22 |
| 7 | Painting the old iron works with synthetic Enamel paint of approved quality etc, complete. | 255.00 | 34641.75 | 606.53 | 82184.82 | 47543.07 |
| 8 | Supply and fixing of 1200mm AC Ceiling fan etc, complete. | 12.00 | 30240.00 | 13.00 | 32760.00 | 2520.00 |
| | **Total** | | **391620.10** | | **849703.19** | **458083.09** |
| ஆ | மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் | | | | | |
| 1 | Supplying and fixing UPVC Windows of basement type (open) from the profile etc, complete. | | | 87.72 | 655861.39 | 655861.39 |
| 2 | Dismantling the damaged floor tiles and removing away from site etc, complete. | | | 735.81 | 51249.17 | 51249.17 |
| 3 | Paving the floor with Vertified Marbonite tiles of approved quality etc, complete. | | | 795.71 | 1173314.18 | 1173314.18 |
| 4 | Laying the flooring with Anti Skid Coloured Ceramic tiles of size 200mmx200mmx6mm etc, complete. | | | 24.24 | 25248.63 | 25248.63 |
| 5 | Painting two coats with best synthetic enamel paint of approved Colour for New iron works etc, complete. | | | 211.41 | 30204.15 | 30204.15 |
| | **Total** | | | | **1935877.52** | **1935877.52** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : | | **391620.10** | | **849703.19** | **458083.09** |
| 2 | மதிப்பீட்டில் இல்லாத இனங்கள்: | | | | **1935877.52** | **1935877.52** |
| | Total | | **391620.10** | | **2785580.71** | **2393960.61** |

தொடர்ச்சி..

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2023–2024** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டது. மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் **2023–24** ஆம் ஆண்டு பொது பணி துறையின் செந்தார விலைவிகிதப்பட்டியல் படி செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் M/s Selvam Infrastructures, ஒப்பந்ததாரர், சேலம். என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**65.00** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது.இதற்கான செலவுத் தொகை ரூ.**2393960.61/–**னை, M/s Selvam Infrastructures, ஒப்பந்ததாரர், சேலம். அவர்களுக்கு வழங்கவும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est. No. 272 / 2023 – 2024)**
**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

3) சேலம் மாநகராட்சி 2023–24–ஆம் ஆண்டு SFC பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண் **41** இல் பாவடி பெண்கள் மேல்நிலை பள்ளியில் கட்டிட பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**60.00** இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண் **25739 / 2023 / SS2** நாள்: **26–10–2023** இல் உரிய நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **24–11–2023** இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டு, மதிப்பீட்டு தொகைக்கு **0.05%** குறைவு என வரப்பெற்ற M/s Selvam Infrastructures, ஒப்பந்ததாரர், சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**49,93,422.00/–**ஐ ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் **495** நாள்: **26–12–2023** இல் ஒப்புக்கொள்ளப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டது.

மேற்படி, பழுது மற்றும் பராமரிப்பு பணி நடைபெறும் பொழுது பணி நடைபெறும் கட்டுமானத்தில் தளஅளவுகளின் மாற்றங்கள் காரணமாக சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அது குறித்து ஆணையாளர், மற்றும் மாநகர பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின்படி மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் அளவு பணிகளும், சில இனங்கள் கூடுதலாகவும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட்ட அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| அ | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் | | | | | |
| 1. | Dismantling the Damaged Pressed tiles & Weathering Course | 331.00 | 14,528.00 | 394.62 | 16,968.66 | 2440.66 |
| 2. | Brick work in cement mortar 1:5 mix | 2.00 | 13,225.00 | 3.34 | 22,084.08 | 8859.08 |
| 3 | Plastering with cement mortar 1:5 mix, 12mm thick | 55.00 | 14,265.00 | 460.31 | 119,220.29 | 104955.29 |
| | | | | | | |
| 4 | Fabricating Supply and fixing and position of MS doors with double leave | 33.00 | 89,763.00 | 64.63 | 175,793.60 | 86030.60 |
| 5 | Supplying and fixing UPVC Windows | 76.00 | 631,788.00 | 82.18 | 683,162.34 | 51374.34 |
| 6 | Finishing the top with Solar Reflective Ceramic Tiles | 360.00 | 360,180.00 | 369.86 | 369,860.00 | 9680.00 |
| 7 | Dadooing walls with Ceramic tiles of size 20cm x 20cm x 6mm first quality design tiles | 95.00 | 128,080.00 | 265.18 | 357,462.64 | 229382.64 |
| 8 | Painting two coats with ready mixed plastic emulsion paint | 5,033.00 | 1,209,531.00 | 5,823.44 | 1,397,625.60 | 188094.60 |
| 9 | Painting two coats enamel paint | 141.00 | 20,159.00 | 235.66 | 33,463.72 | 13304.72 |
| 10 | Painting two coats enamel paint | 41.00 | 3,479.00 | 141.11 | 11,853.24 | 8374.24 |
| 11 | Wiring with 2 x 1.5 sq.mm (22/0.3) for open PVC light point. (SD.No.21) | 46.00 | 85,376.00 | 74.00 | 137,344.00 | 51968.00 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | Wiring with 2 x 1.5 sq.mm (22/0.3) PVC for open PVC fan point. (SD.No.21) | 43.00 | 79,808.00 | 63.00 | 116,928.00 | 37120.00 |
| 13 | Supply and fixing of 5A 3-Pin and 2 Pin combined flush type wall Socket with 5A flush type Switch | 23.00 | 37,996.00 | 40.00 | 66,080.00 | 28084.00 |
| 14 | Supply and fixing of 1200mm 48′ AC ceiling fan) | 43.00 | 100,749.00 | 44.00 | 103,092.00 | 2343.00 |
| 15 | Supply and fixing of 4' 18W Crystal Glass LED Tube Light | 46.00 | 29,670.00 | 68.00 | 43,860.00 | 14190.00 |
| 16 | Supply and Fixing of the Following Pipes and Specials etc., Complete. | | | | | |
| a | 110mm Dia PVC Pipe | 24.50 | 6,733.00 | 111.26 | 30,485.24 | 23752.24 |
| b | 110mm Dia PVC Bend | 14 | 2,453.00 | 18 | 3,150.00 | 697.00 |
| c | 110mm Dia PVC Clamp | 28 | 560.00 | 67 | 1,340.00 | 780.00 |
| | **Total** | | **2828343.00** | | **3689773.41** | **861430.41** |
| ஆ | **கூடுதல் இனங்கள்** | | | | | |
| 1 | Plain cement concrete 1:2:4 mix using 20mm metal | | | 29.59 | 186,587.14 | 186587.14 |
| 2 | Chipping of roughening the surface | | | 527.89 | 19,363.01 | 19363.01 |
| 3 | Flooring Vitrified flooring tiles of size 600 x 600 x 8mm of approved colour and quality | | | 345.25 | 509,188.51 | 509188.51 |
| 4 | Removing the Damaged Doors and Windows | | | 197.45 | 27,550.20 | 27550.20 |
| | **Total** | | | | **742688.86** | **742688.86** |

_தொடர்ச்சி..

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : | | 2828343.00 | | 3689773.41 | 861430.41 |
| 2 | மதிப்பீட்டில் இல்லாத இனங்கள்: | | | | 742688.86 | 742688.86 |
| | Total | | 2828343.00 | | 4432462.27 | 1604119.27 |

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் 2023–2024 ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டது. மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் 2023–24 ஆம் ஆண்டு பொது பணி துறையின் செந்தார விலைவிகிதப்பட்டியல் படி செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் M/s Selvam Infrastructures, சேலம். என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.60.00 இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான செலவுத் தொகை ரூ.1604119.27/–னை, M/s Selvam Infrastructures, சேலம் அவர்களுக்கு வழங்கவும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est. No. 260 /2023–2024)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4) சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட **புதிய பேருந்து நிலையத்தில் “பேருந்து நுழைவு கட்டண வசூல்”** குத்தகை இனத்திற்கு **06.11.2024**–ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உச்சகேள்வி கோரியவர்களின் விபர பட்டியல் கீழ்க்கண்டவாறு உள்ளது.

**<u>புதிய பேருந்து நிலைய “பேருந்து நுழைவு கட்டண வசூல்” (வார அடிப்படை) : (நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு வாரத்திற்கு ரூ.1,05,769/– (ஆண்டிற்கு ரூ.55,00,000/–)</u>**

| வ.எண் | பெயர் / முகவரி | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம். சத்தியமூர்த்தி த/பெ.மணி, 4/89–மேற்கு காடு, கூத்தாநந்தம், துத்திபாளையம், நாமக்கல் – 637 503. 9842829899. | ரூ. 20,00,000/– DD – 010189 EMD –010191 Date - 04.11.24. | ரூ.1,06,057/– (வாரம்) (ரூ.55,15,000/– ஆண்டுக்கு) | ஆண்டு ஏலத்தொகை அரசு மதிப்பை விட ரூ.15,000/– அதிகம். |
| 2. | திரு.வெங்கடாசலம், 149, ஸீ ஏச் பீ காலனி மேற்கு, வேலூார் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல்–637211. 9443029697 | ரூ. 20,00,000/– DD – 431729. EMD –431722 Date - 04 .11.24. | ரூ.1,05,771/– (வாரம்) (ரூ.55,00,100/– ஆண்டுக்கு) | ஆண்டு ஏலத்தொகை அரசு மதிப்பை விட ரூ.100/– அதிகம். |

தொடர்ச்சி..

**புதிய பேருந்து நிலையத்தில் "பேருந்து நுழைவு கட்டண வசூல்"** குத்தகை இனத்திற்காக ஒப்பந்தப்புள்ளியில் மொத்தம் இரண்டு நபர்கள் உரிய வங்கி வரைவோலைகளை **05.11.2024–ம்** தேதி சமர்ப்பித்துள்ளார்கள். பிணை வைப்புத் தொகைகளையும் வங்கி வரைவோலைகளாக சமர்ப்பித்துள்ளார்கள்.

மேலும், **06.11.2024–ம்** தேதி நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வரைவோலைகளை ஒப்படைத்த இருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்கண்ட பட்டியலின்படி மேலும், வரிசை எண்.**1–**ல் உள்ள திரு.எம். சத்தியமூர்த்தி த/பெ.மணி, என்பவர் ரூ.**1,06,057/–**க்கு (வாரம் அடிப்படையில்) உச்சகேள்வி கோரியுள்ளார். இத்தொகை ஆண்டுக்கு ரூ.**55,15,000/–** ஆகும். இத்தொகை அரசுமதிப்பை விட ஆண்டுக்கு ரூ.**15,000/–** கூடுதலாகவும், **19.07.2024** ஆம் தேதியன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உச்சக்கேள்வியான ரூ.**55,12,000/–**தை விட ரூ.**3,000/–** கூடுதலாகவும் கோரப்பட்டுள்ளது. வரிசை எண்.**2**ல் உள்ள திரு.வெங்கடாசலம், என்பவர் ரூ.**1,05,771/–**க்கு (வாரம் அடிப்படையில்) உச்சகேள்வி கோரியுள்ளார். இத்தொகை ஆண்டுக்கு ரூ.**55,00,100/–** ஆகும். இத்தொகை அரசுமதிப்பை விட ஆண்டுக்கு ரூ.**100/–** அதிகமாகவும், **19.07.2024** ஆம் தேதி நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உச்சக்கேள்வியான ரூ.**55,12,000/–**தை விட ரூ.**11,900/–** குறைவாக கோரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட விபரங்களின்படி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.**1–**ல் உள்ள திரு.எம். சத்தியமூர்த்தி த/பெ.மணி, என்பவர் நிர்ணயிக்கப்பட்ட அரசு மதிப்பைவிட ரூ.**15,000/–** அதிகமாக கோரியுள்ளதை ஏற்று, குத்தகை காலம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு முதலாம் ஆண்டிற்கு மேற்படி உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையும், மேலும் அவர்களது சம்மதத்தின் அடிப்படையில் முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கும், இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கும், குத்தகை நிர்ணயம் செய்து குத்தகை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் உரிமம் வழங்கிட மாமன்றத்தின் பரிசீலனைக்கும், அனுமதிக்கும்.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம் .
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி குத்தகை இனம் ஒப்படைத்திடவும், மேலும் மேல்நடவடிக்கையினை தொடரலாம்.

(கே1 / 1896 / 2021)

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1. 2 அனுமதிக்கப்பட்டது.**

**5)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட குத்தகை இனங்கள் 2024 ஆம் ஆண்டுடன், கீழ்க்கண்டுள்ள விபரப்படி குத்தகை காலம் முடிவடைய உள்ளதால், மீண்டும் குத்தகை உரிமம் வழங்கிட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ.எண். | குத்தகை இனம் | குத்தகை முடிவடையும் தேதி |
|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையம் கட்டண கழிப்பக சுங்க கட்டண வசூல் | 16.11.2024 |
| 2. | புதிய பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு அறை சுங்க கட்டண வசூல் | 16.11.2024 |
| 3. | இராமலிங்கம் நாளங்காடி சுங்க கட்டண வசூல் | 19.12.2024 |
| 4. | செவ்வாய்பேட்டை குண்டுசெட்டி ஏரி பாரஉந்து வண்டிவாகன நிறுத்தம் மற்றும் இதர வண்டி வாகன சுங்க கட்டண வசூல் | 23.12.2024 |

மேலும், அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டும், சிறப்பு கட்டுப்பாடுகள் மற்றும் ஆண்டு உரிமையாணை இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கண்ட நான்கு குத்தகை இனங்களுக்கு முறையே 2024–2025 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5 % உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கும், இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5 % உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கும் குத்தகை நிர்ணயம் செய்து உரிமம் வழங்கிட ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், இதற்காக நாளிதழில் விளம்பரம் செய்து அதற்குண்டான தொகையை சூரமங்கலம் வார்டு அலுவலகத்திலிருந்து வழங்கலாம்.

மேலும், மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு முன்வைப்புத் தொகை, பிணைய வைப்புத்தொகை, சால்வன்சி சான்று மதிப்பு மற்றும் சால்வன்சி தர இயலாதவர்கள் ரொக்கமாக செலுத்தப்பட வேண்டிய தொகைகளை கீழ்க்கண்டுள்ள விபரப்படி நிர்ணயம் செய்யலாம்.

| வ. எண். | குத்தகை இனம் | முன்வைப்புத் தொகை ரூ. | பிணை வைப்புத் தொகை 1% | சால்வன்சி சான்று மதிப்பு ரூ. | சால்வன்சி தர இயலாதவர்கள் ரொக்கமாக செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையம் கட்டண கழிப்பக சுங்க கட்டண வசூல் | 20,00,000/– | 20,000/– | 20,00,000/– | 20,00,000/– |
| 2. | புதிய பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு அறை சுங்க கட்டண வசூல் | 1,00,000/– | 1,000/– | 1,00,000/– | 1,00,000/– |
| 3. | இராமலிங்கம் நாளங்காடி சுங்க கட்டண வசூல் | 16,00,000/– | 16,000/– | 16,00,000/– | 16,00,000/– |

தொடர்ச்சி..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | செவ்வாய்பேட்டை குண்டுசெட்டி ஏரி பாரஉந்து வண்டிவாகன நிறுத்தம் மற்றும் இதர வண்டி வாகன சுங்க கட்டண வசூல் | 10,00,000/– | 10,000/– | 10,00,000/– | 10,00,000/– |

எனவே, மேற்கண்ட விபரப்படி தொகைகளை நிர்ணயம் செய்து, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை அனுமதிக்கலாம்.

மேற்கண்ட பட்டியலில் உள்ள ஆண்டு குத்தகை இனங்கள் நான்கிற்கு 06.11.2024–ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உச்சகேள்வி கோரியவர்களின் விபர பட்டியல் வரிசை கிரமமாக கீழ்க்கண்டவாறு உள்ளது.

<u>1.புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பக சுங்க கட்டண வசூல் குத்தகை இனம் :</u>

புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பக குத்தகை இனத்திற்கு நடைமுறையில் உள்ள கட்டண கழிப்பகங்கள் உடன் சேர்த்து, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட இரண்டு புதிய கழிப்பறைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 12.08.2024 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. புதியதாக கட்டப்பட்ட கழிப்பறையினை பொது மக்கள் பயன்பாட்டிற்கும், பராமரிப்பிற்கும் மேற்கொள்ள இக்குத்தகை இனத்திற்கு சேர்த்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

| வ.எண் | பெயர் / முகவரி | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.எம். சத்தியமூர்த்தி த/பெ.மணி, 4/89–மேற்கு காடு, கூத்தாநந்தம், துத்திபாளையம், நாமக்கல் – 637 503. 9842829899. | ரூ. 20,00,000/– DD – 010193 EMD –010192 Date - 04.11.24. | ரூ.2.94,649/– (வாரம்) (ரூ.1,53,21,750/– ஆண்டுக்கு) | கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.15,18,399/– அதிகமாவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.21,65,328/– அதிகம் |
| 2. | திரு.வெங்கடாசலம், 149, ஸீ. ஏச். பீ. காலனி மேற்கு, வேலூர் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல்–637211. 9443029697 | ரூ. 20,00,000/– DD – 431728. EMD –431721 Date - 04 .11.24. | ரூ.2,65,481/– (வாரம்) (ரூ.1,38,05,000/– ஆண்டுக்கு) | கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.1,649/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.6,48,578/– அதிகம். |

''புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பக சுங்க கட்டண வசூல் குத்தகை இனம்'' குத்தகை இனத்திற்காக டெண்டரில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.1, மற்றும் 2 –ல் உள்ள இரண்டு நபர்கள் உரிய வங்கி வரைவோலைகளை 05.11.2024–ம் தேதி மாலை 4.00 மணிக்குள் சமர்ப்பித்துள்ளார்கள். பிணை வைப்புத் தொகைகளையும் சமர்ப்பித்துள்ளார்கள்.

தொடர்ச்சி..

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு சென்ற ஆண்டு குத்தகைதொகை மதிப்பு ஆண்டுக்கு ரூ.1,38,03,351/– மற்றும் மூன்று ஆண்டு சராசரி மதிப்பு ஆண்டுக்கு ரூ.1,31,56,422/– ஆகும். இதில் சம்மந்தப்பட்ட குத்தகை இனத்திற்கு 06.11.2024–ல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் காசோலைகள் ஒப்படைத்த இரண்டு பேரில் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டது. இதில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.1–ல் உள்ள திரு.எம்.சத்தியமூர்த்தி த/பெ.மணி என்பவர் ரூ.2,94,649/–க்கு (வார அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட (294649*52=1,53,21,750/–) சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிட ஆண்டுக்கு ரூ.15,18,399/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.21,65,328/– அதிகமாகவும் கோரியுள்ளார். வரிசை எண்.2–ல் உள்ள திரு.வெங்கடாசலம், என்பவர் ரூ.2,65,481/–க்கு (வார அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட (265481*52=1,38,05,000/–) கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.1,649/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.6,48,578/– அதிகமாக கோரியுள்ளார். மேற்குறிப்பிட்ட விபரங்களின்படி வரிசை எண்.1–ல் உள்ளவர் நிர்ணயிக்கப்பட்ட (294649*52=1,53,21,750/–) சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிட ஆண்டுக்கு ரூ.15,18,399/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.21,65,328/– அதிகமாகவும் கோரியுள்ளார் என்பதை ஏற்கலாம்.

2.புதிய பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு அறை கட்டண வசூல் குத்தகை இனம் :

| வ.எண் | பெயர் / முகவரி | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.எம். சத்தியமூர்த்தி த/பெ.மணி, 4/89–மேற்கு காடு, கூத்தாநந்தம், துத்திபாளையம், நாமக்கல் – 637 503. 9842829899. | ரூ. 1,00,000/– DD – 010187 EMD –010194 Date - 04.11.24. | ரூ.4,16,760/– ஆண்டுக்கு | கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.19,847/– அதிகமாவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.38,447/– அதிகம் |
| 2. | திரு.வெங்கடாசலம், 149, ஸீ. ஏச். பீ. காலனி மேற்கு, வேலூர் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல்–637211. 9443029697 | ரூ. 1,00,000/– DD – 431725. EMD –431726 Date - 04 .11.24. | ரூ.4,00,000/– ஆண்டுக்கு | கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.3,087/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.21,687/– அதிகம். |

தொடர்ச்சி..

''புதிய பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு அறை கட்டண வசூல்_குத்தகை இனம்'' குத்தகை இனத்திற்காக டெண்டரில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.1, மற்றும் 2 –ல் உள்ள இரண்டு நபர்கள் உரிய வங்கி வரைவோலைகளை 05.11.2024–ம் தேதி மாலை 4.00 மணிக்குள் சமர்ப்பித்துள்ளார்கள். பிணை வைப்புத் தொகைகளையும் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு சென்ற ஆண்டு குத்தகைதொகை மதிப்பு ஆண்டுக்கு ரூ.3,96,913/– மற்றும் மூன்று ஆண்டு சராசரி மதிப்பு ஆண்டுக்கு ரூ.3,78,313/– ஆகும். இதில் சம்மந்தப்பட்ட குத்தகை இனத்திற்கு 06.11.2024–ல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் காசோலைகள் ஒப்படைத்த இரண்டு பேரில் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டது. இதில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.1–ல் உள்ள திரு.எம்.சத்தியமூர்த்தி த/பெ.மணி என்பவர் ரூ.4,16,760/–க்கு (ஆண்டு அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிட ஆண்டுக்கு ரூ.19,847/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.38,447/– அதிகமாகவும் கோரியுள்ளார். வரிசை எண்.2–ல் உள்ள திரு.வெங்கடாசலம், என்பவர் ரூ.4,00,000/–க்கு (ஆண்டு அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.3,087/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.21,687/– அதிகமாக கோரியுள்ளார். மேற்குறிப்பிட்ட விபரங்களின்படி வரிசை எண்.1–ல் உள்ளவர் நிர்ணயிக்கப்பட்ட சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிட ஆண்டுக்கு ரூ.19,847/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.38,447/– அதிகமாகவும் கோரியுள்ளார் என்பதை ஏற்கலாம்.

<u>3.இராமலிங்கம் நாளங்காடி கட்டண வசூல் குத்தகை இனம் :</u>

| வ.எண் | பெயர் / முகவரி | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.த.சரவணன் த/பெ. தர்மலிங்கம், 75, பஜனைமடம் தெரு, சேலம்–9. 9842769620 | ரூ. 16,00,000/– DD – 199350 EMD - 199349 Date - 05.11.24. | ரூ.1.45,225/– (வாரம்) (ரூ.75,51,700/– ஆண்டுக்கு) | கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.3,64,502/– அதிகமாவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.7,01,317/– அதிகம் |
| 2. | திரு.எம்.ரவிக்குமார் த/பெ. மாது, 222/125 ஏ, அரிசிப்பாளையம் மெயின்ரோடு, சேலம்–9, 9842641445 | ரூ. 16,00,000/– ChQ – 579651 EMD - 579652 Date - 05.11.24. | ரூ.1,20,000/– (வாரம்) (ரூ.62,40,000/– ஆண்டுக்கு) | கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.9,47,198/– குறைவாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.6,10,383/– குறைவு. |

தொடர்ச்சி..

‘‘இராமலிங்கம் நாளங்காடி கட்டண வசூல் குத்தகை இனம்’’ குத்தகை இனத்திற்காக டெண்டரில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.1–ல் உள்ளவர் மட்டும் உரிய வங்கி வரைவோலைகளை 05.11.2024–ம் தேதி மாலை 4.00 மணிக்குள் சமர்ப்பித்துள்ளார். பிணை வைப்புத் தொகைகளையும் சமர்ப்பித்துள்ளார். வரிசை எண்.2–ல் உள்ளவர் முன்வைப்புத்தொகை மற்றும் பிணை வைப்புத்தொகைக்கு காசோலையை சமர்ப்பித்துள்ளதால், வரிசை எண்.2–ல் உள்ளவரின் ஒப்பந்தப்புள்ளி படிவம் நிராகரிப்பு செய்யப்படுகிறது.

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு சென்ற ஆண்டு குத்தகைதொகை மதிப்பு ஆண்டுக்கு ரூ.71,87,198/– மற்றும் மூன்று ஆண்டு சராசரி மதிப்பு ஆண்டுக்கு ரூ.68,50,383/– ஆகும். இதில் சம்மந்தப்பட்ட குத்தகை இனத்திற்கு 06.11.2024–ல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வங்கி வரைவோலை ஒப்படைத்தவர் ஏலம் கோர முன்வரவில்லை.

ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டது. இதில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.2–ல் உள்ளவர் ஒப்பந்தப்புள்ளி படிவம் நிராகரிப்பட்டுள்ளதால், வரிசை எண்.1–ல் உள்ள திரு.த.சரவணன் த/பெ. தர்மலிங்கம், என்பவர் ரூ.1,45,225/–க்கு (வார அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட (145225*52=75,51,700/–) சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிட ஆண்டுக்கு ரூ.3,64,502/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.7,01,317/– அதிகமாகவும் கோரியுள்ளார். மேற்குறிப்பிட்ட விபரங்களின்படி வரிசை எண்.1–ல் உள்ளவர் நிர்ணயிக்கப்பட்ட (145225*52=75,51,700/–) சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிட ஆண்டுக்கு ரூ.3,64,502/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.7,01,317/– அதிகமாகவும் கோரியுள்ளார் என்பதை ஏற்கலாம்.

<u>4. செவ்வாய்பேட்டை குண்டுசெட்டி ஏரி பாரஉந்து வண்டிவாகன நிறுத்தம் மற்றும் இதர வண்டி வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனம் :</u>

| வ.எண் | பெயர் / முகவரி | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.ஈ.தண்டபாணி த/பெ.ஈஸ்வரன்,173, ரத்தினசாமிபுரம், வையாபுரி காடு, லீ பஜார், சேலம்–9. 9688685459. | ரூ. 10,00,000/– DD – 125388 EMD - 125387 Date - 05.11.24. | ரூ.30,10,825/– ஆண்டுக்கு | கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.1,44,325/– அதிகமாவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.2,78,658/– அதிகம் |
| 2. | திருபி.எம்.சுரேஷ்குமார், 114/73, தமணன் ரோடு, அரிசிப்பாளையம், சேலம்–9. 8056756356. | ரூ. 10,00,000/– ChQ – 658391 EMD - 658392 Date - 05.11.24. | ரூ.27,00,000/– ஆண்டுக்கு | கடந்த ஆண்டின் ஏலத்தொகையை விட ரூ.1,66,500/– குறைவாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.32,167/– குறைவு. |

தொடர்ச்சி..

“செவ்வாய்பேட்டை குண்டுசெட்டி ஏரி பாரஉந்து வண்டிவாகன நிறுத்தம் மற்றும் இதர வண்டி வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனம்” குத்தகை இனத்திற்காக டெண்டரில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.1–ல் உள்ளவர் மட்டும் உரிய வங்கி வரைவோலைகளை 05.11.2024–ம் தேதி மாலை 4.00 மணிக்குள் சமர்ப்பித்துள்ளார். பிணை வைப்புத் தொகைகளையும் சமர்ப்பித்துள்ளார். வரிசை எண்.2–ல் உள்ளவர் முன்வைப்புத்தொகை மற்றும் பிணை வைப்புத்தொகைக்கு காசோலையை சமர்ப்பித்துள்ளதால், வரிசை எண்.2–ல் உள்ளவரின் ஒப்பந்தப்புள்ளி படிவம் நிராகரிப்பு செய்யப்படுகிறது.

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு சென்ற ஆண்டு குத்தகைதொகை மதிப்பு ஆண்டுக்கு ரூ.28,66,500/– மற்றும் மூன்று ஆண்டு சராசரி மதிப்பு ஆண்டுக்கு ரூ.27,32,167/– ஆகும். இதில் சம்மந்தப்பட்ட குத்தகை இனத்திற்கு 06.11.2024–ல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வங்கி வரைவோலை ஒப்படைத்தவர் ஏலம் கோர முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டது. இதில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.2–ல் உள்ளவர் ஒப்பந்தப்புள்ளி படிவம் நிராகரிப்பட்டுள்ளதால், வரிசை எண்.1–ல் உள்ள திரு.ஈ.தண்டபாணி த/பெ.ஈஸ்வரன், என்பவர் ரூ.30,10,825/–க்கு (ஆண்டு அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிட ஆண்டுக்கு ரூ.1,44,325/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.2,78,658/– அதிகமாகவும் கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட விபரங்களின்படி வரிசை எண்.1–ல் உள்ளவர் நிர்ணயிக்கப்பட்ட சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிட ஆண்டுக்கு ரூ.1,44,325/– அதிகமாகவும், கடந்த மூன்று ஆண்டின் சராசரியை விட ரூ.2,78,658/– அதிகமாகவும் கோரியுள்ளார் என்பதை ஏற்கலாம்.

எனவே, மேற்கண்ட குத்தகை இனபட்டியல்களின்படி 1, 2, 3 மற்றும் 4–ல் உச்சக்கேள்வி கோரியுள்ளவர்கள் சென்ற ஆண்டு குத்தகை தொகை மற்றும் மூன்று ஆண்டு சராசரியைவிட கூடுதலாக கோரியுள்ளதை ஏற்று, குத்தகை காலம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அதாவது முதலாம் ஆண்டிற்கும், மேலும் அவர்களது சம்மதத்தின் அடிப்படையில் முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கும், இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கும் என குத்தகை தொகை நிர்ணயம் செய்து குத்தகை உரிமம் வழங்கிட மாமன்றத்தின் பரிசீலனைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

1. மாமன்றம் அனுமதிக்கலாம் .
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி குத்தகை இனம் ஒப்படைத்திடவும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கே1 / 5407 / 2024)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1. 2 அனுமதிக்கப்பட்டது.**

6) சேலம் மாநகராட்சியி சுற்றி அமைந்துள்ள ஊராட்சி பகுதிகளில் தனியார் கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் மூலமாக நச்சுநீர் தொட்டிகளில் சேகரம் செய்யப்படும் கழிவு நீரை கொண்டு இம்மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகப்பு நிலையங்களை முழு திறனுடன் பயன்படுத்திக்கொள்ள Indian Institute of Human Settlements (IIHS) னால் தயார் செய்யப்பட்டு, அரசாணை (2டி) எண். 35 நாள். 15,05,2020 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது அதன்படி அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை அவர்களின் நே.மு.க.எண். 0335/ CGS– 4/2024, நாள். 14.02.2024. மற்றும் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்களின் கடிதம் ந.க,எண்.704/2024 அ6 நாள்:24.09.2024 தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பேரில் சேலம் மாவட்டத்தில் உள்ள சேலம், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், ஓமலூர், ஊராட்சி ஒன்றியங்களுக்கு சம்மந்தப்பட்ட கீழ்கண்ட கிராம ஊராட்சிகளை சேலம் மாநகராட்சியின் மல கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுடன் (FSTP) இணைக்க

| வ. எண் | ஊராட்சி ஒன்றியம் | கிராம ஊராட்சி | தற்காலிகமாக உத்தேசிக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் |
|---|---|---|---|
| 1. | சேலம் | 1.ஆண்டிப்பட்டி | மான்குட்டை |
| | | 2.அய்யம்பெருமாம்பட்டி | |
| | | 3.செட்டிச்சாவடி | |
| | | 4.தளவாய்ப்பட்டி | |
| | | 5.எருமாபாளையம் | |
| | | 6.இனாம்வேடுகத்தாம்பட்டி | |
| | | 7.கொண்டப்பநாய்க்கன்பட்டி | |
| | | 8.மஜ்ராகொல்லப்பட்டி | |
| | | 9.மல்லமூப்பம்பட்டி | |
| | | 10.சன்னியாசிகுண்டு | |
| | | 11.சர்க்கார் கொல்லப்பட்டி | |
| | | 12.சேலத்தாம்பட்டி | |
| | | 13.திருமலைகிரி | |
| | | 14.வட்டமுத்தாம்பட்டி | |
| 2. | வீரபாண்டி | 1.பெருமாம்பட்டி | வண்டிப்பேட்டை |
| | | 2.பூலாவரி அக்ரஹாரம் | |
| | | 3.புதூர் அக்ரஹாரம் | |
| | | 4.உத்தமசோழபுரம் | |
| 3. | பனமரத்துப்பட்டி | 1.அமானிகொண்டலாம்பட்டி | வண்டிப்பேட்டை |
| | | 2.தாசநாய்க்கன்பட்டி | |
| | | 3.நெய்க்காரப்பட்டி | |
| | | 4.தம்மநாய்க்கன்பட்டி | |

தொடர்ச்சி..

| | | | |
|---|---|---|---|
| 4. | அயோத்தியாபட்டணம் | 1.அதிகாரிப்பட்டி | வெள்ளக்குட்டை |
| | | 2.கோராத்துப்பட்டி | |
| | | 3.எம்.பாலப்பட்டி | |
| | | 4.உடையாப்பட்டி | |
| | | 5.வீராணம் | |
| 5. | ஓமலூர் | 1.மாங்குப்பை | மான்குட்டை |
| | | 2.சாமிநாய்க்கன்பட்டி | |
| | | 3.வெள்ளக்கல்பட்டி | |

சேலம், வீராபாண்டி, பனமரத்துப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், ஓமலூர், ஊராட்சி ஒன்றியங்களின் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் கடிதங்களில் கோரப்பட்டவாறு, மேற்படி பட்டியலில் கண்டுள்ள கிராம ஊராட்சிகளில் இருந்து அகற்றம் செய்யப்படும் மலக்கசடுகளை வாகனங்களில் கொண்டு வந்து சேலம் மாநகராட்சியின் மான்குட்டை, வண்டிப்பேட்டை மற்றும் வெள்ளக்குட்டை பகுதிகளில் செயல்பட்டு வரும் மல கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வெளியேற்றி அவற்றை செயலாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பட்டியலில் கண்டுள்ள ஊராட்சி ஒன்றியத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவும் மேற்படி ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வரும் தனியார் கழிவு நீர் அகற்றும் வாகனங்களுக்கு நகராட்சி நிர்வாகம் ஆண்டு ஒன்றிற்கு ரூ 1000/– வசூல் செய்து கொண்டு உரிமம் வழங்கிடவும், நச்சுத் தொட்டி கழிவு நீரை வெளியேற்றம் செய்திட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை சுமார் நான்கு வருடங்களுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ளவும் மேலும் கசடு கழிவுகளைத்தவிர வேறு எந்த விதமான கழிவுகள் கழிவுநீ சுத்திகரிப்பு நிலையத்திற்குள் அனுமதிக்க இயலாது எனவும் வாகனம் ஒன்றிற்கு நடை ஒன்றிற்கு கட்டணம் ரூ.100/– வீதம் வசூல் செய்து கொண்டு அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

அனுமதிக்கலாம்.

(எப்2/12419/2020)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

7) இந்திய பிராணிகள் நல வாரியத்தின் கடிதம் எப்.என்.24–02/2020–21/ABC நாள்: 05.04.2022 ல் உள்ளாட்சி அமைப்புகளில் தெரு நாய்களுக்கு இனப்பெருக்க கட்டுபாடு அறுவை சிகிச்சைக்கு முந்தைய பராமரிப்பு, உணவு, மருந்துகள், அறுவை சிகிச்சை, அறுவை சிகிச்சைக்கு பிந்தைய பராமரிப்பு கட்டணம் ரூ.1,450/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், சேலம் மாநகராட்சியில் புறஒப்படைப்பு முகமை மூலமாக தெருநாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் பணிக்கு(அறுவை சிகிச்சைக்கு முந்தைய பராமரிப்பு, உணவு, மருந்துகள், அறுவை சிகிச்சை, அறுவை சிகிச்சைக்கு பிந்தைய பராமரிப்பு உட்பட) 2 ஆண்டுகளுக்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரிட மாமன்ற தீர்மானம் எண்.260 நாள்: 24.06.2022 ல் அனுமதிக்கப்பட்டதின் பேரில், புளூ கிராஸ் ஆப் இந்தியா நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நாய் ஒன்றிற்கு ரூ.1400/– என்பதை ஏற்றுக்கொண்டு, 30.07.20222 ல் பணி ஆணை வழங்கி, மாமன்ற தீர்மானம் எண்.424 நாள்: 26.08.2022 ல் பின்னேற்பு பெறப்பட்டுள்ளது.

அதன்பின்னர் வெளியிடப்பட்ட அரசாணை எண்(4டி) எண்.01 கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்( ஏ.எச்3)துறை நாள்:17.03.2023 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20383/2022/ எச்1 நாள்: 07.09.2023 ன்படி நாய் ஒன்றிற்கு ரூ.1650/– ( நாய் பிடிப்பதற்கு ரூ.200/– மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை சம்மந்தமான பணிகளுக்கு ரூ.1450/ ) என்ற வீதத்தில் செப்டம்பர் 2023 முதல் ஜூலை 2024 வரை திருவாளர்கள். புளூ கிராஸ் ஆப் இந்தியா, சென்னை நிறுவனத்திற்கு வழங்கவும், இதற்காக ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டைவிட, கூடுதலான அளவில் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்ற திர்மானம் எண்.381 நாள்:26.09.2023 ல் அனுமதிக்கப்பட்டு, இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறைகள் நாள்: 27.09.2023 ல் கூடுதல் தொகைக்கு அனுமதித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி புளூ கிராஸ் ஆப் இந்தியா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் 31.07.2024 உடன் முடிவடைந்து விட்டதால், புளூ கிராஸ் ஆப் இந்தியா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியை 01.08.2024 முதல் 31.10.2024 முடிய உள்ள 3 மாத காலத்திற்கு நீட்டித்து வழங்கிட மாமன்ற தீர்மானம் எண்213 நாள்: 26.07.2024 ல் அனுமதிக்கப்பட்டது. மேற்படி நீட்டிக்கப்பட்ட ஒப்பந்த காலம் 31.10.2024 உடன் முடிந்து விட்ட போதிலும், தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்திட வேண்டி தொடர்ந்து செவ்வாய்பேட்டை மற்றும் வாய்க்கால் பட்டறை மையங்களில் இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், புதியதாக ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முன்பாக சேலம் மாநகராட்சியில் இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ள பிராணிகள் நல வாரியத்திடமிருந்து வாய்க்கால்பட்டறை மற்றும் செவ்வாய்பேட்டை மையங்களுக்கு திட்ட அனுமதி பெற வேண்டியுள்ளது.

தொடர்ச்சி..

எனவே, பொதுமக்களின் நலன் கருதி இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை பணிகள் தொடர்ந்து நடைபெற ஏதுவாக 01.11.2024 முதல் 31.01.2025 வரையுள்ள மேலும் 3 மாத காலத்திற்கு புளூ கிராஸ் ஆப் இந்தியா நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தை நீட்டித்து வழங்கவும், அதற்கான கூடுதல் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அனுமதிக்கலாம்.

(எப்1 /10417 /2022)

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

**8)** சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வளர்க்கப்படும் மாடுகள் மற்றும் குதிரைகள் போன்ற கால்நடைகளை அடைத்து வைத்து வளர்க்காமல் ஆடு, மாடு, எருமை, குதிரை, பன்றி போன்ற கால்நடைகளை சாலைகளில் திரிய விடப்படுவதாலும், தெருக்களின் ஓரங்களிலும், சாலையோரங்களில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைகளிலும் கட்டிவைக்கப்படுவதால், போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் பெரும் இடையூறு ஏற்பட்டு வருகிறது. இதனால் வாகன ஓட்டிகளுக்கு விபத்துக்கள் நேரிடவும் உயிரிழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளதால் அவற்றை பிடித்து அப்புறப்படுத்துமாறு பல்வேறு தரப்பினரிடமிருந்தும் புகார்கள் வரப்பெற்ற வண்ணம் உள்ளது.

எனவே, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மிகுந்த சாலைகளில் திரிவதால் கால்நடைகளுக்கு காயம் மற்றும் உயிரிழப்பு ஏற்படுவதை தவிர்க்கவும், பொதுமக்களின் நலன் கருதியும் சாலைகள் மற்றும் பொது இடங்களில் சுற்றித் திரியும் கால்நடைகள் மற்றும் சாலையோரங்களிலும், நடைபாதைகளிலும் போக்குவரத்திற்கு இடையூறாக கட்டிவைக்கப்படும் கால்நடைகளை பிடித்து மாநகராட்சியின் தொழுவத்தில் அடைத்து வைத்து அதன் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கவும், 48 மணி நேரத்திற்குள் சம்மந்தப்பட்ட உரிமையாளர்களால் மீட்கப்படாத பட்சத்தில், உரிமை கோரப்படாத கால்நடைகளை பொதுஏலம் நடத்தி அத்தொகையை மாநகராட்சி கணக்கில் சேர்க்கவும் தமிழ்நாடு நகர்புர பகுதிகளில் விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்படுத்துதல் சட்டம் 1997 பிரிவு 10 ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சிகள் அமைப்பு விதிகள் 2023 விதி எண் 292 துணைப்பிரிவு 4 ல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் பறவைகளுக்கு துணைப்பிரிவு 4 வரிசை எண். (a) முதல் (i) வரை கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கீழ்கண்ட துணைப் பிரிவுகளில் இப்பொருள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

**துணைப்பிரிவு 6:** உரிமம் பெறாமலோ அல்லது உரிமத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறி பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதமாக தெருவில் திரியும் கால்நடைகள் மற்றும் பறவைகளை பிடித்து உள்ளாட்சி அமைப்பால் பராமரிக்கப்பட்டுவரும் கால்நடைகள் பராமரிப்பு மையத்தில் ( பவுண்ட்) அடைக்க வேண்டும்.

**துணைப்பிரிவு 7:** துணைப்பிரிவு 6 ன் படி அடைக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் பறவைகளை 48 மணி நேரத்திற்குள் திரும்ப உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டியிருப்பின், அதற்கு மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்படும் அபராதம் மற்றும் பராமரிப்பு தொகை வசூல் செய்ய வேண்டும்.

**துணைப்பிரிவு 8:** கால்நடைகள் பராமரிப்பு மையத்தில் (பவுண்ட்) அடைத்து வைக்கப்பட்டுள்ள கால்நடைகள் மற்றும் பறவைகளை 48 மணி நேரத்திற்குள் உரிமத்தை காட்டி திரும்ப பெறப்படாத உரிமையாளர்களுக்கு, உரிமம் பெற விண்ணப்பிக்கவோ, உரிமத்தை சமர்ப்பிக்கவோ போதிய கால அவகாசம் அளித்து அதற்காக மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்படும் அபராதம் மற்றும் பராமரிப்பு தொகை வசூல் செய்து கொண்டு ஆணையாளர் அனுமதிக்கலாம்.

**துணைப்பிரிவு 9:** மேற்படி கால்நடைகள் பராமரிப்பு மையத்தில் ( பவுண்ட்) அடைக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் பறவைகளை குறிப்பிட்ட கால அவகாசத்திற்கும் திரும்ப பெறப்படாத நேர்வுகளில், அவற்றை பொதுஏலம் விட்டு அத்தொகையை மாநகராட்சி கணக்கில் சேர்க்க வேண்டும். இரண்டு முறை ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டும் ஏலம் போகாத கால்நடைகள் மற்றும் பறவைகளை அரசு சுகாதார அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் போன்ற விலங்கு நலனில் அக்கறை கொண்ட அமைப்புகளிடம் ஒப்படைக்கலாம்.

அதனடிப்படையில் மாநகராட்சியின் எல்லைக்குள் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் பறவைகளுக்கு கீழ்கண்டவாறு கட்டணம் செலுத்துவதின்பேரில் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்துக்கொள்ளும் வகையில் உரிமம் வழங்கிட நடவடிக்கை எடுக்கலாம்.

**அட்டவணை:1**

| வ.எண் | கால்நடைகள் விபரம் | உரிமக் கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1. | மாடு, எருமை, குதிரை ஒன்றிற்கு | 100 |
| 2. | ஆடு ஒன்றிற்கு | 50 |
| 3. | நாய் ஒன்றிற்கு | 50 |

**உரிமம் பெறுவதற்கான நிபந்தனைகள்:**

1. கால்நடை மற்றும் பறவைகளை தொழுவம்/கூண்டுகள் அமைத்து சுகாதாரமாக பராமரிக்க வேண்டும்.
2. கால்நடை மற்றும் பறவைகளை சாலைகள் அல்லது பொது இடங்களில் வைத்து பராமரிக்கவோ, திரிய விடவோ கூடாது.
3. கால்நடைகளால் உருவாகும் திட மற்றும் திரவ கழிவுகளை தங்களது சொந்த பொறுப்பில் பாதுகாப்பாக அப்புறப்படுத்த வேண்டும்.
4. கால்நடைகளுக்கு தொற்று நோய் ஏற்படின் உடனடியாக பொதுசுகாதார பிரிவிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி..

5. நாய்களுக்கு வெறிநோய் (ரேபீஸ்) தடுப்பூசி செலுத்தியும், கருத்தடை செய்தும் கால்நடை மருத்துவரின் தடையின்மை சான்று பெற்று ஆண்டிற்கு ஒருமுறை உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
6. தங்களால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் பறவைகளால், பொதுமக்களுக்கு காயங்களோ, ஆபத்துகளோ அல்லது தொந்தரவோ ஏற்படாது என்பதனை உரிமையாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.
7. தொழுவத்தை ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலர்களை எவ்வித முன்அனுமதியுமின்றி எந்த நேரத்திலும் ஆய்வு செய்ய உரிமம் பெற்றவர் அனுமதிக்க வேண்டும்.

மேற்கண்ட விபரப்படி மாநகராட்சி எல்லைக்குள் வளர்க்கப்படும் கால்நடைகள் அல்லது பறவைகளையும், உரிமம் பெறாமலோ அல்லது உரிமத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறி பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதமாக தெருவில் திரியும் கால்நடைகள் மற்றும் பறவைகளை பிடித்து உள்ளாட்சி அமைப்பால் பராமரிக்கப்பட்டுவரும் கால்நடைகள் பராமரிப்பு மையத்தில் (பவுண்ட்) அடைக்கப்படுவதற்கும், அவற்றை 48 மணி நேரத்திற்குள் திரும்ப உரிமையாளரிடம் ஒப்படைக்கவம், 48 மணி நேரத்திற்குள் திரும்ப பெறாத உரிமையாளர்களுக்கு கால அவகாசம் அளிக்கவும் கீழ்கண்ட விபரப்படி அபராதம் மற்றும் பராமரிப்பு தொகை வசூல் செய்யலாம்.

<u>அட்டவணை:2</u>

| வ. எண் | கால்நடைகள் விபரம் | முதல் 48 மணி நேரத்திற்கு அபராதம் ரூ. | 48 மணி நேரத்திற்கு மேல் நாள் ஒன்றிற்கு அபராதம் ரூ. | பராமரிப்புக் கட்டணம் நாள் ஒன்றிற்கு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | மாடு, எருமை, குதிரை ஒன்றிற்கு | 2000 | 500 | 500 |
| 2. | ஆடு ஒன்றிற்கு | 500 | 100 | 100 |
| 3. | நாய் ஒன்றிற்கு | 250 | 50 | 50 |

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சிகள் அமைப்பு விதிகள் 2023 விதி எண் 292 ல் தெரிவிக்கப்பட்ட விதிகளுக்குட்பட்டு மேற்கண்ட அட்டவணை 1 ல் கண்டுள்ள விபரப்படி உரிமக் கட்டணம் பெற்றுக்கொண்டு உரிமம் வழங்கிடவும், உரிமம் பெறாமலோ அல்லது உரிமத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறி பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதமாக தெருவில் திரியும் கால்நடைகள் மற்றும் பறவைகளை பிடித்து உள்ளாட்சி அமைப்பால் பராமரிக்கப்பட்டுவரும் கால்நடைகள் பராமரிப்பு மையத்தில் (பவுண்ட்) அடைக்கப்படுவதற்கும் மேற்கண்ட அட்டவணை 2 ல் கண்டுள்ளவாறு அபராதம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் வசூல் செய்யவும், குறிப்பிட்ட கால அவகாசத்திற்கும் திரும்ப பெறப்படாத கால்நடைகள் மற்றும் பறவைகளை அவற்றை பொதுஏலம் விட்டு அத்தொகையை மாநகராட்சி கணக்கில் சேர்க்கவும், இரண்டு முறை ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டும் ஏலம் போகாத கால்நடைகள் மற்றும் பறவைகளை அரசு சாரா அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் போன்ற அமைப்புகளிடமோ அல்லது விலங்கு நலனில் அக்கறை கொண்ட விலங்கு நல ஆர்வலர்களிடமோ ஒப்படைக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு: –</u>

அனுமதிக்கலாம்.

**(எப்1/ 22075 / 2022)**

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

**9)** சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.56க்கு உட்பட்ட களரம்பட்டி நெ.4, தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மழைகாலமாக இருப்பதாலும் தொடர்ந்து மழை பொழிவு அதிகமாக இருப்பதாலும், மேலும் வடகிழக்கு பருவமழை காரணமாக மேற்படியான இடத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க வேண்டிய அவசர அவசியம் உள்ளது.

எனவே 2020–2021ம் ஆண்டு 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் (15th C.F.C) நிதியின் சேமிப்பு தொகையில் இருந்து மேற்படி பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு கடந்த 21.11.2023ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பணிக்கு மெஸர்ஸ். Selvam Infrastructures, Salem நிறுவனத்தின் மூலம் ரூ.41,87,151.35/– (0.05%) குறைவாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதை தொடர்ந்து மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்படாமல் நிலுவையாக இருந்தது.

2024–2025ம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்க கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.இ4/2587/2024, நாள்.24.05.2024ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. நாளது தேதி வரை உரிய அனுமதி கிடைப்பப் பெறாத காரணத்தினால் பணியின் அவசர அவசியம் கருதி 2024–2025ம் ஆண்டு மாநகராட்சி பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ளவும், பின்னர் அரசு மான்யம் பெறப்பட்டவுடன் அம்மானியத் தொகையினை மாநகராட்சி கணக்கிற்கு ஈடு செய்து கொள்ளலாம்.

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மெஸர்ஸ். Selvam Infrastructures, Salem, நிறுவனத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கலாம். மேற்படி பணிக்கு எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு :–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு 2024–2025ம் ஆண்டு மாநகராட்சி பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம். பின்னர் அரசுமான்யம் பெறப்பட்டவுடன் மாநகராட்சி கணக்கிற்கு ஈடுசெய்து கொள்ளலாம்.

**(இ4/349/ 2023–2024)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1. 2 அனுமதிக்கப்பட்டது.**

10) சேலம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு 2023-24 மற்றும் 2024-25 ஆண்டுகளுக்கான 8 ஆண் பணியாளர்களுக்கான சீருடைகள் வழங்கும் பொருட்டு 09.11.2024-ம் தேதி விற்பனை மேலாளர், கோ.ஆப்.டெக்ஸ், சேலம் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கிரடிட் பில் எண்;17077-ன் தொகை ரூ.25048/-ஐ வழங்குவதற்கும், அரசாணை (நிலை) 306 நிதி (ஊதியம்) துறை, நாள் : 13.10.2017-ன் படி சீருடைகளுக்கான தையற்கூலி ரூ.12,800/-ம் வழங்குவதற்கும் அனுமதி வேண்டி பொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | தேவைப்படும் சீருடையின் அளவு | மொத்தம் (மீட்டர்) | ஒரு மீட்டர் துணியின் விலை (ரூபாயில்) | மொத்த தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | <u>ஆண் பணியாளர் - வெள்ளை நிற அரைக்கை சட்டை 2023-24 & 2024-25</u><br>ஓட்டுநர்கள் : 8 x 2.25மீ x 4 செட் | 72 | 213 | 15336.00 |
| 2 | <u>ஆண் பணியாளர் - வெள்ளை நிற முழுக்கால் பேண்ட் 2023-24 & 2024-25</u><br>ஓட்டுநர்கள் : 8 x 1.25மீ x 4 செட் | 40 | 213 | 8,520.00 |
| | | **மொத்தம்** | | 23,856.00 |
| | GST 2023-24 @2.5% & 2024-25 @2.5% | Invoice No:17077 | | 1,192.80 |
| | | **மொத்தம்** | | 25,048.80 |
| 3 | தையற்கூலி :<br>2023-24 & 2024-25<br>ஓட்டுநர்கள் : 8 x ரூ.400 x 4 | | | 12,800.00 |
| | | **மொத்தம்** | | 37,848.80 |

<u>அலுவலக்குறிப்பு :-</u>

1. விற்பனை மேலாளர், கோ.ஆப்டக்ஸ், சேலம் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கிரடிட் பில் எண் 17077, நாள் : 09.11.2024 -ன் தொகை 25,049/- வழங்க அனுமதிக்கலாம்
2. 2023-24 மற்றும் 2024-25-ம் ஆண்டுகளுக்கு ஆண் ஓட்டுநகளுக்கு பேண்ட் மற்றும் சட்டைக்கான தையற்கூலி தலா ரூ.400/- வீதம் 4 செட் சீருடைகளுக்கு மொத்த தொகை ரூ.12,800/- வழங்க அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் செலவினத் தொகையினை சேலம் மாநகராட்சி 2024-25-ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.
4. மேற்படி பணிகளுக்கு எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(டி9/1730/2024)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1. 2, 3, 4 அனுமதிக்கப்பட்டது.

**11)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண் **28**–க்கு சம்மந்தப்பட்ட வரியில்லா இனங்களில் உள்ள மாநகராட்சி வணிக வளாகங்கள் **1)** குண்டுசெட்டி ஏரி வணிக வளாகம் **2)** சந்தைப்பேட்டை மெயின் ரோடு வணிக வளாகம் **3)** சந்தை பேட்டை வணிக வளாகம் **4)** வண்டிப்பேட்டை வணிக வளாகம் ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள் சுமார் **5654.81** சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளன. மேற்படி கடைகள் அனைத்தும் கட்டப்பட்டு சுமார் **31** ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. கடைகள் அனைத்தும் உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்கள் நேராய்வு செய்ததில், மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளன. எனவே மேற்படி பழுதடைந்த கட்டிடங்களை தமிழ்நாடு அரசாணை (நிலை) எண்: **174** நாள்: **14–12–2022** –ன் படி கட்டிடத்தின் Present Book Value ஆனது ரூ.**2,48,35,629/–** என PWD Deprecation Value மூலம் நிர்ணயக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும், மற்றும் மேற்படி கட்டிடங்களை இடிப்பது குறித்து ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு மன்ற அனுமதியுடன் கடிதம் அனுப்பவும், மேற்படி கட்டிடங்களை இடிப்பதற்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **44.80** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண். 12ல் கன்னாங்காடு வடக்கு குறுக்கு தெரு பிரதான சாலை ,கன்னாங்காடு வடக்கு குறுக்கு தெரு பிரதான சாலை மேற்கு குறுக்கு –1 ,கன்னாங்காடு வடக்கு குறுக்கு தெரு பிரதான சாலை மேற்கு குறுக்கு –2, அன்பு நகர் பிரதான சாலை. 1 ,அன்பு நகர் பிரதான சாலை. 2 , வடக்கு தெற்கு பிரதான சாலை (ரேசன் கடைமுதல்) ,மேற்கு கிழக்கு சாலை (ரேசன் கடை அடுத்து) ,அன்பு நகர் வடக்கு தெற்கு குறுக்கு தெரு–1 (ஹவுசிங் போர்டு முதல்) ,அன்பு நகர் வடக்கு தெற்கு குறுக்கு தெரு–2 ,அன்பு நகர் வடக்கு தெற்கு குறுக்கு தெரு–3 ,அன்பு நகர் வடக்கு தெற்கு குறுக்கு தெரு–4 , கோட்டம் எண். 13ல் டி.வி.எஸ். காலனி பிரதான சாலை (பாரதி நகர் வரை) ,டி.வி.எஸ். காலனி தெற்கு குறுக்கு தெரு–4 (புகழ் அசோசியேட்ஸ்) ,டி.வி.எஸ். காலனி தெற்கு குறுக்கு தெரு–5 ,டி.வி.எஸ். காலனி தெற்கு குறுக்கு தெரு–1 முதல் 3 இணைப்பு சாலை) ஆகிய பகுதிகளில் தார் சாலை மறுசீரமைக்கும் பணி மேற்கொள்ள TURIP 2023–24 திட்ட நிதியின் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.78.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கையின் மீது நிர்வாகஅனுமதி வழங்கி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தபுள்ளி மூலம் ஒப்பந்தம் கோரப்பட்டதில் குறைவான தொகையை கோரிய ஒப்பந்ததாரர் M/s. சக்தி கன்ஸ்ட்ரக்சன், பள்ளபட்டி என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி நிறைவேற்றப்பட்டது.

மேற்படி பணி நடைபெறும் பொழுது மாநகராட்சி ஆணையாளர் மற்றும் மாநகர பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட பணிகளில் கீழ்கண்டுள்ளவாறு சில இனங்கள் மதிப்பீட்டு அளவைவிட கூடுதலாக நிறைவேற்ற வேண்டிய அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியினை முடித்திட அறிவுறுத்தப்பட்டதின் பேரில் நிறைவேற்றப்பட்டுள்ளது

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு அளவு | கூடுதல் அளவு | கூடுதல் தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | Advance Patch work upto 50mm thick | 62.00 m3 | 18.65m3 | 72037.12 |
| 2 | Providing & Laying TC 2 Kg/10 Sq.m | 15127.00m2 | 986.20m2 | 23333.49 |
| 3 | Providing & Laying BC 30mm thick | 454.00m3 | 29.54 m3 | 274987.86 |
| | | | **Total** | **3,70,358.47** |

தொடர்ச்சி..

மேற்கண்ட பணிகளை நிறைவேற்றியதற்கு ஏற்பட்ட கூடுதல் செலவுத் தொகை **ரூ.3,70,358.47** ஆனது ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான **ரூ.78.00** இலட்சத்திற்குள் அடங்குவதால் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பணிகளுக்குண்டான செலவின தொகை **ரூ.3,70,358.47–ஐ** வழங்கிடவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை, அரசாணை (Ms) எண்.158, நாள்.02.11.2022 மற்றும் 2023ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table- II இன்படி இப்பணிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ4/ம.எண்.103/R/2022–2023)**

**தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.**

**36)** சேலம் மாநகராட்சி 2021–22 ஆம் ஆண்டு மத்திய நிதிக்குழு மான்யம் (15th CFC) நிதியின் கீழ் சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்: 2 இல் உள்ள காமராஜ் காலனியில் தாழ்வான பகுதிகளில் மழை காலங்களில் மழைநீர் மற்றும் கழிவு நீர் வெளியேற வழியில்லாமல் உள்ளதால் அப்பகுதியில் கீழ் நிலை கழிவு நீர் சேகரிப்பு தொட்டி (Sewage & Storm Water Collection Sump) அமைத்து அத்தொட்டியில் சேகரமாகும் நீரை வெளியேற்ற 20 to 100 m3 / hour (10 HP) தானியங்கி கழிவு நீர், நீர் மூழ்கி மோட்டார் (Auto Start Non – Clog Sewage Motor) பொருத்தி 200 மீட்டர் நீளத்திற்கு 4' Dia PVC Pipe அமைத்தல் மற்றும் ஆழ்துளை கிணற்றிற்கு நீர் மூழ்கி மோட்டார், 160 மீ 3' Dia PVC Pipe அமைக்கும் பணியை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் 03–01–2024 –ம் தேதி வழங்கிய நிர்வாக அனுமதியின் பேரில் முதன் முறையாக 05–03–2024 –ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1. | M/s TCK Trade India, Namkkal (L1). | **ரூ.15,71,811/–** | 0.08% மதிப்பீட்டைவிட குறைவு | UDYAM -TN-14-0002936 Date: 10-03-2020. |
| 2. | M/s SVN Bore well Service, Namkkal (L2). | **ரூ.16,00,481/–** | 1.74% மதிப்பீட்டைவிட அதிகம் | UDYAM -TN-14-0029867 Date: 05-01-2020. |

தொடர்ச்சி..

மேற்காணும் வரிசை எண்.1 ல் கண்டுள்ள M/s TCK Trade India,Namkkal (L1). என்ற ஒப்பந்ததாரர் ரூ.**15,71,811/–** என மதிப்பீட்டை விட **0.08%** குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்புக்கொண்டு **13–03–2024** ஆம் தேதி பணி ஆணை வழங்கப்பட்டது.

**15**வது நிதிக்குழு மான்யம் **2021–22** இல் மேற்படி பணி மேற்கொள்ள சேலம் மாநகராட்சி மாமன்ற அவசர தீர்மானம் எண்: **3** நாள்: **26–09–2023** இல் அனுமதி பெறப்பட்டு, தற்போது பணிகள் முடிக்கப்பட்டன. **15**வது நிதிக்குழு மான்யம் **2021–22** இல் போதிய நிதி இல்லாத காரணத்தினால், மேற்படி பணிக்குண்டான மதிப்பீடு தொகை ரூ.**20.00** இலட்சத்தினை குடிநீர் நிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் செலவினங்களையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(இ 2/ ம. எண். 82 / கு.நீ / 2023–24)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

**37)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண் **15** இல் அமைந்துள்ள ஆணையாளர் அவர்களின் அலுவலக குடியிருப்பு கட்டிடத்தில் பெயிண்டிங், சுற்றுச்சுவர் வேலி, புல்வெளி, உள் மற்றும் வெளிப்புற மின் ஏற்பாடுகள் மற்றும் கூடுதல் அபிவிருத்தி வசதிகள் செய்யும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**19.95** இலட்சத்திற்கு சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். **441** நாள்: **25–10–2024** இல் அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **20–11–2024**–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| **1.** | M/s Sri Vaideeswara & Co.,<br>2/154, Pandarathan Kattu Valavu,<br>Mallikuttai Post, Omalur (Tk),<br>Salem-3. | **0.02%** குறைவு<br>**(ரூ.16,71,019.70)** | EMD. Rs.19,950/-<br>Ref No. 5939391187792<br>UTR No.CPAELYEAA6<br>SBI Bank / Date 20-11-2024. |
| **2.** | M/s K S R Co.,<br>7, Palaniappa Nagar,<br>Hasthampatty, Salem -7. | **0.91%** அதிகம்<br>**( ரூ.16,86,548.50)** | EMD. Rs.19,950/-<br>Ref No. 5939391187809<br>UTR No.CPAELYEPT6<br>SBI Bank / Date 20-11-2024. |

தொடர்ச்சி..

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.02%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய M/s Sri Vaideeswara & Co., ஒப்பந்ததாரா் சேலம். அவா்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை **ரூ.16,71,019.70/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்: **158** நாள்: **02–11–2022** மற்றும் **2023** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகா்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table –II இன் படி மேற்கண்ட பணிக்கு M/s Sri Vaideeswara & Co., சேலம். ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பாா்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ 6/ ம. எண். 207 / B / 2024–25)**

**தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.**

**38)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் அஸ்தம்பட்டி வாா்டு அலுவலகம் கோட்டம் எண் **15** இல் அமைந்துள்ள ஆணையாளா் அவா்களின் அலுவலக குடியிருப்பு கட்டிடத்தில் False Ceiling, Modular Kitchen and wall Tiles, நீா் வழங்கல், சுகாதார ஏற்பாடுகள் மற்றும் கூடுதல் வசதிகள் செய்யும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயாா் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.19.93** இலட்சத்திற்கு சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். **440** நாள்: **25–10–2024** இல் அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **20–11–2024–ம்** தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரா் பெயா்** | **ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு)** | **முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம்** |
|---|---|---|---|
| **1.** | M/s Sri Vaideeswara & Co.,<br>2/154, Pandarathan Kattu Valavu,<br>Mallikuttai Post, Omalur (Tk),<br>Salem-3. | **0.02%** குறைவு<br>**(ரூ.16,70,980.10)** | EMD. Rs.19,930/-<br>Ref No. 5939431187796<br>UTR No.CPAELYDPE2<br>SBI Bank / Date 20-11-2024. |
| **2.** | M/s K S R Co.,<br>7, Palaniappa Nagar,<br>Hasthampatty, Salem -7. | **1.00%** அதிகம்<br>**( ரூ.16,87,879.10)** | EMD. Rs.19,930/-<br>Ref No. 5939431187812<br>UTR No.CPAELYEXC0<br>SBI Bank / Date 20-11-2024. |

தொடா்ச்சி..

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.02%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய M/s Sri Vaideeswara & Co., ஒப்பந்ததாரர் சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**16,70,980.10/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்: **158** நாள்: **02–11–2022** மற்றும் **2023** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table –II இன் படி மேற்கண்ட பணிக்கு M/s Sri Vaideeswara & Co., சேலம். ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ 6/ ம. எண். 208 / B / 2024–25)**

**தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.**

**39)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு CGF நிதியின் கீழ் அம்மாபேட்டை மண்டல அலுவலகம் கோட்டம் எண் **10** இல் செங்கலணை அருகே திருமணி முத்தாறு ஆற்றில் பக்கவாட்டு சுவருடன் கூடிய பாலம் மற்றும் பசுமை பூங்கா அமைக்கும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **8.56** கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். **12079 / 2024 /SS2** நாள்: **22–07–2024** இல் உரிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் அவர்களின் கடிதம் ந. க. எண். **18484 /2023 / DO1** நாள்: **24–07–2024** இல் உரிய தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி பணிக்கு **14–11–2024** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| **1.** | Thiru. C.P Gopalakrishnan, 1/272 C Pidariyur M Pidariyur (Po) Chennimalai 638 051. | **0.15%** குறைவு (ரூ.**7,11,51,657.40**) | EMD. Rs.8,56,000/-<br>Ref No. 5848541184864<br>UTR No.IGASBUSJP4<br>SBI Bank / Date 14-11-2024. |
| **2.** | M/s Vino Construction, Erode. | **2.66%** அதிகம் ((ரூ.**7,31,49,460.00**) | EMD. Rs.8,56,000/-<br>Ref No. 5848541184932<br>UTR No.IGASBUXAG9<br>SBI Bank / Date 14-11-2024. |

தொடர்ச்சி..

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.15%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய Thiru. C.P Gopalakrishnan, ஒப்பந்ததாரர், சென்னிமலை. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **7,11,51,657.40/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளவும், பணி ஆணை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

(அ) அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்கு எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(E6 / 16230 / 2024)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

**40)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் அஸ்தம்பட்டி மண்டல அலுவலகம் கோட்டம் எண்: **29** இல் மரவனேரி சாலையில் அரசினர் கலைக்கல்லூரி மற்றும் மாவட்ட மைய நூலகம் செல்லும் சாலையின் வடக்குபுறம் பகுதியில் உள்ள ஆழமான சாக்கடையில் பாத சாரிகள் விழாமல் இருப்பதற்க்காக அமைக்கப்பட்ட (Stainless Steel) சிதிலமடைந்து பயன்பாடின்றி உள்ள தடுப்பு கம்பிகளை அகற்றி கான்கீரிட் சுவர் அமைக்கும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**39.90** இலட்சத்திற்கு சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். **444** நாள்: **25–10–2024** இல் அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **20–11–2024** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1. | M/s S S Associates,<br>622 Vannier Nagar,<br>Alagapuram Periyapudur,<br>Salem – 636 016. . | **0.03%** குறைவு<br>**(ரூ.33,35,089.00)** | EMD. Rs.39,900/-<br>Ref No. 5963201186650<br>UTR No.CHR6852185<br>SBI Bank / Date 20-11-2024. |
| 2. | M/s Sri Naachimaar Engineering Constrctions,<br>7/3 Pudhumarapanur,<br>Ariyur (Po), Namakkal 637 015. | **4.99%** அதிகம்<br>**( ரூ.35,02,271.00)** | EMD. Rs.39,900/-<br>Ref No. 5963201188747<br>UTR No.CPAELYFNB4<br>SBI Bank / Date 20-11-2024. |

தொடர்ச்சி..

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.03%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய M/s S S Associates, ஒப்பந்ததாரர், சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **33,35,089.00/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்:158 நாள்: 02–11–2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table –II இன் படி, மேற்கண்ட பணிக்கு M/s S S Associates, ஒப்பந்ததாரர், சேலம். அவர்களுக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பதிவு செய்யலாம்.

**(E6 / EST No. 206 / B / 2024-25)**

**தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.**

**41)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் சூரமங்கலம் மண்டல அலுவலகம் கோட்டம் எண் **25** இல் பள்ளப்பட்டி பகுதியில் கட்டப்பட்டு வரும் மின் மயானத்தினை முழுமையாக இயக்கத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வழிகாட்டுதலின்படி Control panel PLC, உள்ளிட்ட தானியங்கி மின் சாதன கருவிகள் 25 KVA Disel UPVC Doors, பேவர் பிளாக் தளம் அமைத்தல் LED விளக்குகள் பொருத்துதல் போன்ற கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**41.50** இலட்சத்திற்கு சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். **467** நாள்: **25–10–2024** இல் அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **20–11–2024** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| **1.** | Thiru. Mariappan Rajendran Contractors,<br>No.2/3 NGGO Colony,<br>Collectorate Post, Nallampalli TK, Dharmapuri 636 705. | **0.02%** குறைவு<br>**(ரூ.33,60,943.11)** | EMD. Rs.41,500/-<br>Ref No. 5958371186897<br>UTR No.CPAELSSMM7<br>SBI Bank / Date 20-11-2024. |
| **2.** | M/s Raj Solar Power and Electrical Systems<br>3/503 Savulupatti,<br>Old Quarters, Collectorate (Po.)<br>Dharmapuri 636 705. | **1.38%** அதிகம்<br>**( ரூ.34,07,779.07)** | EMD. Rs.41,500/-<br>Ref No. 5958371186916<br>UTR No.CPAELSTOH0<br>SBI Bank / Date 20-11-2024. |

தொடர்ச்சி..

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.02%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய Thiru. Mariappan Rajendran Contractors, தர்மபுரி. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **33,60,943.11/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்:158 நாள்: 02–11–2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table –II இன் படி, மேற்கண்ட பணிக்கு Thiru. Mariappan Rajendran Contractors, தர்மபுரி. அவர்களுக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பதிவு செய்யலாம்.

**(E6 / EST No. 08 / B / 2024-25)**

**தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.**

**42)** சேலம் மாநகராட்சி **2023–24** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகம் கோட்டம் எண் **60** இல் சீலநாயக்கன்பட்டி எரிவாயு தகன வளாக பகுதியில் உள்ள எம்.சி.சி கட்டிடத்தில் கூடுதல் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**9.95** இலட்சத்திற்கு **09–05–2024–** ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **20–11–2024** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1. | Thiru. Mariappan Rajendran Contractors,<br>No.2/3 NGGO Colony, Collectorate Post, Nallampalli TK, Dharmapuri 636 705. | **0.12%** குறைவு<br>**(ரூ.7,99,497.78)** | EMD. Rs.9,950/-<br>Ref No. 5958431186905<br>UTR No.CPAELSSUU9<br>SBI Bank / Date 20-11-2024. |
| 2. | M/s Raj Solar Power and Electrical Systems<br>3/503 Savulupatti,<br>Old Quarters, Collectorate (Po.)<br>Dharmapuri 636 705. | **4.24%** அதிகம்<br>**( ரூ.8,34,448.98)** | EMD. Rs.9,950/-<br>Ref No. 5958431186918<br>UTR No.CPAELSTVA8<br>SBI Bank / Date 20-11-2024. |

தொடர்ச்சி..

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.12%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய Thiru. Mariappan Rajendran Contractors, தர்மபுரி. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **7,99,497.78/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்:**158** நாள்: **02–11–2022** மற்றும் **2023** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table –II இன் படி, மேற்கண்ட பணிக்கு Thiru. Mariappan Rajendran Contractors, தர்மபுரி. அவர்களுக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(E6 / EST No. 380 / B / 2023-24)**

**தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.**

**43)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண் **30** இல் செவ்வாய்பேட்டை பகுதியில் நீண்ட நாட்களாக சிறுவர் விளையாட்டு திடல் இல்லாத காரணத்தினால் வார்டு – AD, பிளாக் எண்: **8,** Ts. No. 52 -க்குட்பட்ட கந்தசாமி தெருவில் புதியதாக பசுமை வெளி பூங்கா அமைக்கும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**60.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

(அ) அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டு தொகை ரூ.**60.00** இலட்சத்தினை **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

**(E3 / EST No. 212 / B / 2024-25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

**44)** சேலம் மாநகராட்சி **2023–24–**ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண் **44** இல் களரம்பட்டி மெயின் ரோட்டில் புதியதாக கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார நல வாழ்வு மைய கட்டிடத்தில் போர்டிகோ சுற்றுச்சுவர் மற்றும் கூடுதல் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**26.00** இலட்சத்திற்கு **13–09–2023** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு **0.07%** குறைவு என வரப்பெற்ற திரு. டி. வைத்தி ஒப்பந்ததாரர், சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**19,79,258.50/–**ஐ ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டு, சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் **450** நாள்: **30–10–2023** இல் பதிவு செய்யப்பட்டது. தற்போது பணி முடிக்கப்பட்டது.

தொடர்ச்சி..

மேற்படி, பழுது மற்றும் பராமரிப்பு பணி நடைபெறும் பொழுது பணி நடைபெறும் கட்டுமானத்தில் தளஅளவுகளின் மாற்றங்கள் காரணமாக சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அது குறித்து ஆணையாளர், மற்றும் மாநகர பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின்படி மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் அளவு பணிகளும், சில இனைங்கள் கூடுதலாகவும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட்ட அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| அ | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் | | | | | |
| 1 | Earth work excavation for foundation in Hard Stiff Clay etc, complete. | | | | | |
| | b) Open Excavation | 26.00 | 4350.84 | 26.44 | 4415.48 | 64.64 |
| 2 | Supplying and fixing MS grill to Entrance gate etc, complete. | 300.00 | 27474.00 | 531.40 | 48623.10 | 21149.10 |
| 3 | Wall Finishing with Putty Powder Three Coats using Putty Powder etc, complete. | 159.00 | 24066.24 | 167.80 | 25337.80 | 1271.56 |
| 4 | Supplying and fixing in position best quality approved make colour glazed earthen ware wash hand basin etc, complete. | 4.00 | 9908.00 | 4.00 | 14072.00 | 4164.00 |
| 5 | Painting two coats with best synthetic enamel paint of approved Colour for new iron works etc, complete. | 13.00 | 1787.89 | 34.68 | 4751.16 | 2963.27 |
| 6 | Wiring with 2 x 1.5 sqmm (22 / 0.3) PVC insulated SC unsheathed PVC Plug Point (SD-36) etc, complete. | 9.00 | 9882.00 | 16.00 | 17568.00 | 7686.00 |
| 7 | Supply and fixing of single box type 4'x18w crystal glass LED Tube light (SD-88) etc, complete. | 10.00 | 6310.00 | 17.00 | 10727.00 | 4417.00 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | Supply and fixing of 1200 mm (48") AC ceiling fan (SD-107) etc, complete. | 6.00 | 13854.00 | 7.00 | 16163.00 | 2309.00 |
| 9 | Supply and laying of 31/2 x 25 sqmm pvc armoured LTUG Cable etc, complete. | 25.00 | 13775.00 | 44.00 | 24244.00 | 10469.00 |
| 10 | Supplying and fixing in position P.V.C. specials etc, complete. | | | | | |
| | 110mm Dia PVC Pipe 6 Ksc (IS 4985 / 2000) | 30.00 | 8244.00 | 57.00 | 15646.50 | 7402.50 |
| | 75mm Dia PVC Pipe 6 Ksc (IS 4985 / 2000) | 20.00 | 5496.00 | 26.60 | 7301.70 | 1805.70 |
| | Washbasin Tap | 3.00 | 450.00 | 4.00 | 600.00 | 150.00 |
| | 5" Jolly | 3.00 | 225.00 | 4.00 | 300.00 | 75.00 |
| | 15mm Dia GI Pipe (IS 1239 / Part-I / 90) | 1.00 | 113.60 | 9.60 | 1084.80 | 971.20 |
| | 15mm Dia GI Coupling (IS 1239 / Part-II) | 5.00 | 90.00 | 8.00 | 144.00 | 54.00 |
| | 15mm Dia GI Elbow (IS 1239 / Part-II) | 4.00 | 108.00 | 8.00 | 216.00 | 108.00 |
| | **Total** | | **126134.57** | | **191194.54** | **65059.97** |
| ஆ | மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் | | | | | |
| 1 | CC 1:1.5:3mix, Using 20mm size ISS gauge HBBG metal etc, complete. | | | 4.72 | 32834.49 | 32834.49 |
| 2 | Providing and laying of Rubber Moulded Hydraulic Pressed Paver Block size 63mm thick etc, complete. | | | 52.21 | 53144.04 | 53144.04 |
| 3 | Flooring with Stain free Nano polish Vetrified flooring tiles of size 600 x 600 x 8mm etc, complete. | | | 64.36 | 94902.04 | 94902.04 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | Supply and fixing in position of white glazed indian oriya type water closet 580 x 440mm size etc, complete. | | | 2.00 | 8047.18 | 8047.18 |
| 5 | Supplying and fixing in position P.V.C. specials etc, complete. | | | | | |
| | 25mm Dia PVC Pipe 6 Ksc | | | 74.65 | 3226.37 | 3226.37 |
| | 25mm Dia PVC Elbow | | | 7.00 | 69.58 | 69.58 |
| | 32mm Dia PVC Pipe 6 Ksc | | | 12.40 | 802.28 | 802.28 |
| | 32mm Dia PVC Elbow | | | 3.00 | 42.72 | 42.72 |
| | **Total** | | | | **193068.70** | **193068.70** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : | | **126134.57** | | **191194.54** | **65059.97** |
| 2 | மதிப்பீட்டில் இல்லாத இனங்கள்: | | | | **193068.70** | **193068.70** |
| | Total | | **126134.57** | | **384263.24** | **258128.67** |

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2023–2024** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டது. மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் **2023–24** ஆம் ஆண்டு பொது பணி துறையின் செந்தார விலைவிகிதப்பட்டியல் படி செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரா் திரு. டி. வைத்தி ஒப்பந்ததாரா், சேலம். என்பவா் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**26.00** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான செலவுத் தொகை ரூ. **258128.67**/–னை, ஏற்கவும் திரு. டி. வைத்தி ஒப்பந்ததாரா் சேலம். அவா்களுக்கு பில்பட்டியல் தொகை வழங்கவும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est No. 211 / B / 2023 – 2024)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

45) சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் மூலம் மேட்டூர் காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தனிக்குடிநீர் திட்டத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்த முறையில் மேற்கொள்வது சம்மந்தமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு ஆணை எண். 112, நாள். 17.06.2022–ல் வெளியிட்டுள்ளது. அரசு ஆணைப்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணியாளர்களின் விவரம் ஒப்பந்த நிபந்தனைகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டதன் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் தொழில் நுட்ப அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

உரிய தொழில் நுட்ப அனுமதி கிடைக்கும் வரை, குடிநீர் விநியோக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டிய பணியின் அவசியத்தை கருதி, தற்காலிக மதிப்பீடுகள் தயார் செய்து மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)–ன் கீழ் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய விலைப்புள்ளிதாரரைக்கொண்டு தனிக்குடிநீர் திட்டம் மேட்டூர் தொட்டில்பட்டியில் ஆற்று நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கோம்புரான்காடு பகுதியில் உள்ள நீர் உந்து நிலையம் முதல் மாநகராட்சி எல்லை வரை உள்ள வழியோர குடிநீர் குழாய்கள், பம்புகள் ஆகியவற்ற இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மேற்காணும் பணிக்காக M/s. B.S.N & Co Salem ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணி ஆணை 23.10.2024–டன் முடிவடைய உள்ளது. ஏனவே, இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை (24.10.2024 முதல் 22.11.2024 வரை) 30 நாட்கள் ரூ. 49.00/–இலட்சத்தில் மேற்கொள்ள M/s. B.S.N & Co Salem ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2024–2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண்.808/கு,நீ /2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

46) சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட தேசிய நெடுஞ்சாலை எண்.44 கி.மீ.203/2 ல் உள்ள கந்தம்பட்டி சாலை சந்திப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலமானது 15.07.2020 முதல் சேலம் மற்றும் பிற மாவட்ட மற்றும் மாநில போக்குவரத்திற்கும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் இருந்து வருகிறது. இம்மேம்பாலத்தில் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு அந்த மின்விளக்குகளுக்காக உதவி பொறியாளர் (தே.நெ) திருச்செங்கோடு அவர்களால் இரு மின் இணைப்புகள் மின்வாரியத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை துறை உதவி பொறியாளர் பெயரில் 07.07.2020 அன்று பெறப்பட்டுள்ளது. பணிமுடிவுற்றவுடன் மேற்படி தெருவிளக்குகளை பராமரிப்பிற்காக மாநகராட்சி வசம் ஒப்படைக்காமல் காலம் தாழ்ந்து ஒப்படைப்பு செய்ய தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ள கடிதம் வழங்கப்பட்டது.

கந்தம்பட்டி தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தில் உள்ள மின்விளக்குகளுக்கு உண்டான மின் கட்டண நிலுவைத்தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தி மேற்படி மின்இணைப்புகளை ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களின் பெயரில் பெயர் மாற்றம் செய்து தருமாறு கோட்டப்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை துறை, சேலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

நெடுஞ்சாலை துறையின் தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பாலப்பணிகளில் பாலம் கட்டப்படும் இடங்களில் மின்விளக்குகள் ஒளிருவதற்கான மின்சார பயன்பாட்டுக்கட்டணம் தொடர்பான செலவினம் ஏதும் தேசிய நெடுஞ்சாலை துறையால் மேற்கொள்ளப்பட இயலாத நிலை உள்ளது என மாவட்ட ஆட்சியர் அலுவலக சட்டம் ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு மாதாந்திர ஆய்வு கூட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை துறை மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 4 ஆண்டுகளாக பராமரிப்பின்மை காரணமாக மேற்படி விளக்குகள் எரியாத நிலை ஏற்பட்டு மேற்படி பாலத்தில் விபத்து உயிரிழப்புகளும், சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகளும் ஏற்பட்டதால் இப்பிரச்சனை தொடர்பாக மாவட்ட சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தில் போக்குவரத்து காவல் துறையினரால் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

தொடர்ச்சி..

மேற்படி மாவட்ட ஆட்சியர் அலுவலக சட்டம் ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தில், வெளிச்சமின்மை காரணமாக மேற்படி பாலத்தில் உயிரிழப்புகள் ஏற்படுவதை தவிர்க்க வேண்டி பயணிகளின் பாதுகாப்பு மற்றும் உயிர் மதிப்பு கருதி மேற்படி தெருவிளக்குகளுக்கான நிலுவைக் கட்டணத்தை மாநகராட்சி மூலம் செலுத்தி அதனை தொடர் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களால் 12.11.2024 அன்றைய கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி தெருவிளக்குகள் மற்றும் அவற்றின் மின் இணைப்பு சாதனங்கள் ஆகியவற்றை தேசிய நெடுஞ்சாலைத் துறையினருடன் இணைந்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் மேற்கண்ட மேம்பாலத்தில் தேசிய நெடுஞ்சாலை துறையின் மூலம் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் முறையாக பராமரிக்கப்படாததால் பழுதடைந்தும் புதைவட கேபிள்கள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது கண்டறியப்பட்டது. மேலும் இம்மாதிரியான சாலை விபத்துகள் நடைபெறமால் தடுப்பதற்கும் பொதுமக்கள் உயிர் பலி ஏற்படாமல் தடுப்பதற்காகவும், தேசிய நெடுஞ்சாலை துறை மூலமாக தொடர் பராமரிப்பு மற்றும் மின் விளக்குகள் பயன்பாட்டு கட்டணம் செலுத்துவதற்கு உண்டான வழிவகை தேசிய நெடுஞ்சாலை துறை மூலமாக இயலாத காரணத்தினால் சேலம் மாநகராட்சி மூலமாக மேற்கண்ட மின்விளக்குகளின் நிலுவைத்தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தி தொடர் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென 12.11.2024 அன்று நடைபெற்ற சட்டம் ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தியதின் படி மேற்கண்ட கந்தம்பட்டி பாலத்தில் தேசிய நெடுஞ்சாலை துறை உதவிப்பொறியாளர் அவர்களின் பெயரில் உள்ள இரு மின் இணைப்புகளுக்கு உண்டான மின் கட்டண நிலுவைத் தொகை ரூ.2,84,738/– ஐ மாநகராட்சி மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்கும் தொடர் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்வதற்கும் சேலம் மாநகராட்சி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

அனுமதிக்கலாம்.

**(இ7/11769/2012)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

47) <u>19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டுக்குட்பட்ட மாரியம்மன் கோவில் தெருவில் சாக்கடை வசதியும், ரோடும் மோசமாக உள்ளது. எனவே, புதியதாக சாக்கடை வசதியும், கான்கிரீட் ரோடு வசதியும் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

48) <u>19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டுக்குட்பட்ட ஜிந்தகி புறத்தில் சாக்கடை வசதியும் ரோடும் மோசமாக உள்ளது. எனவே, புதியதாக சாக்கடை வசதியும், கான்கிரீட் ரோடு வசதியும் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

49) <u>19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டு ஜாகீர் சின்ன அம்மாபாளையம் கருணாநிதி நகரில் சாலை மிக மோசமாக உள்ளது. எனவே அதனை சரி செய்து புதிதாக தார்சாலை வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

50) <u>19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டு ஜாகீர் சின்ன அம்மாபாளையம் கல்யாண சுந்தரம் காலனியில் சாலை மிக மோசமான நிலையில் உள்ளது. இங்கு மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். சாக்கடை கால்வாய் இல்லாத காரணத்தால் தண்ணீர் அங்கேயே தேங்கி நின்று நோய்கள் பரவுகின்றது. மேற்படி பகுதியில் தார்சாலை மற்றும் சாக்கடை கால்வாய் வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

51) 19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டு ஜாகீர் சின்ன அம்மாபாளையத்தில் அமைந்துள்ள மயானம் முட்புதர்கள் முளைத்து ஈம காரியம் செய்ய முடியாத நிலையில் மோசமாக உள்ளது. இங்கு பாம்பு, பல்லிகள் மற்றும் விஷ பூச்சிகள் அதிகமாக உள்ளது. மயானம் செல்லும் சாலையும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மயானத்திற்கு காம்பவுண்ட் சுவர், ஈம காரியங்கள் செய்வதற்கு தண்ணீர் டேங்க் வசதி செய்தல். எனவே, ஊர் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

52) 29வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி கு. கிரிஜா அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 29வது கோட்டத்தில் உள்ள பொதுமக்கள் வார்டு அலுவலகத்தில் அதிகாரிகளை சந்தித்து குறைகளை தெரிவிக்கவும், வளர்ச்சிப் பணிகளுக்கு ஆலோசனை வழங்கிடவும், 29வது வார்டிற்குள் புதிய அலுவலகம் கட்டி கொடுத்தால் வசதியாக இருக்கும், அதற்குரிய இடம் 29வது கோட்ட சுகாதார அலுவலகத்தில் உள்ளது, எனவே, மேற்படி பகுதியில் புதிய அலுவலகம் கட்டிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

53) 35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 35வது கோட்டத்தில் கீழ்கண்ட தெருக்களில் தரைபாலம் அமைத்தல்.

1. ஆதி செல்வ கணபதி தெரு.
2. நஞ்சம்பட்டி காலனி கிரவுண்ட் தெரு-2
3. பட்ட நாயக்கர் காடு தெரு
4. கொளந்தான் தெரு-2
5. ஆதி செல்வன் தெரு
6. பண்டரிநாதர் தெரு நெ.1

மேற்படி பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

54) <u>35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 35வது கோட்டத்தில் பட்ட நாயக்கர் தெருவில் இரண்டு சந்து தெருக்களுக்கு சாக்கடை வசதி கான்கிரீட் ரோடு வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

55) <u>35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 35வது கோட்டத்தில் செங்குந்தர் மயானம் அடுத்த அண்ணா தெரு நெ.1, நெ.2 ஆகிய இரண்டு தெருக்களுக்கு இதுநாள் வரை சாக்கடை வசதி இல்லை.

ஆகவே, மேற்படி இரண்டு தெருக்களுக்கு அடிப்படை வசதியான சாக்கடை அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

56) <u>35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 35வது கோட்டத்தில் உள்ள நஞ்சம்பட்டி காலனியில் புதியதாக போர்வெல்கள்–2 அமைத்தல்.

நஞ்சம்பட்டி ரேசன் கடை தெரு – 1

கிரவுண்ட் தெரு – 1 ஆக 2 போர்வெல்

ஆழ்துளை குழாய் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

57) <u>35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 35வது கோட்டத்தில் உள்ள கிருஷ்ணன்புதூர் ரெயில்வே கேட் அருகே உள்ள கான்கிரீட் சந்து–3 மற்றும் தார்சாலை உள்ள தெருவுக்கு சாக்கடை வசதியும், தார்சாலையும் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

58) <u>35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 35வது கோட்டத்தில் உள்ள கடலூர் மெயின் ரோடு பழனியாண்டி மருத்துவமனை பின்புறம் உள்ள சேலத்து நாயக்கர் காடு தெருவிற்கு இதுநாள் வரை சாக்கடை வசதி இல்லை.

பழனியாண்டி மருத்துவமனையில் இருந்து ரெயில்வே ரோடு வரை சாக்கடை வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

59) <u>35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 35வது கோட்டத்தில் நஞ்சம்பட்டி காலனியில் அமைந்துள்ள கழிப்பிடத்திற்கு

ஆண்கள் கழிப்பிடம் – 4 அறைகள் கட்டுதல்

பெண்கள் கழிப்பிடம் – 6 அறைகள் கட்டுதல்.

மேற்படி பணி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

60) <u>39வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. ஜெயந்தி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 39வது கோட்டத்தில் வார்டு அலுவலகம் இல்லாததால் திரு.வி.க. மெயின் ரோடில் 34வது கோட்டத்திற்கு சேர்ந்த மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. ஆகையால் 39வது கோட்டத்திற்கு வார்டு அலுவலகம் அமைத்தல்.

<u>கீழ்கண்ட பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் அமைத்தல்</u>

1. சவுண்டம்மன் கோயிலில் இருந்து பெரிய கிணறு தெரு, மாதேஸ்வரன் கோயில் இறக்கம் மாருதி நகர் வரை.
2. பஜார் தெரு
3. வைத்தி தெரு
4. பெரிய கிணறு தெரு பள்ளி இருக்கும் தெரு
5. வாட்டர் டேங்க்-ல் இருந்து (CMK) பெரிய கிணறு தெரு
6. மாருதி நகர் எக்ஸ்டன்ஷன் மெயின் ரோடு, 3வது கிராஸ்.
   மேற்படி பகுதிகளில் மழைகாலங்களில் கழிவுநீர் வீட்டிற்குள் வருவதால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். ஆகவே பொதுமக்களின் பொது நலனை கருதி மேற்படி தெருக்களுக்கு மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல்.

மேற்படி பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**61)** சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் மூலம் மேட்டூர் காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தனிக்குடிநீர் திட்டத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்த முறையில் மேற்கொள்வது சம்மந்தமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு ஆணை எண். 112, நாள். 17.06.2022–ல் வெளியிட்டுள்ளது. அரசு ஆணைப்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணியாளர்களின் விவரம் ஒப்பந்த நிபந்தனைகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டதன் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் தொழில் நுட்ப அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உரிய தொழில் நுட்ப அனுமதி கிடைக்கும் வரை, குடிநீர் விநியோக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டிய பணியின் அவசியத்தை கருதி, தற்காலிக மதிப்பீடுகள் தயார் செய்து மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)–ன் கீழ் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய விலைப்புள்ளிதாரரைக்கொண்டு தனிக்குடிநீர் திட்டம் மேட்டூர் தொட்டில்பட்டியில் ஆற்று நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கோம்புரான்காடு பகுதியில் உள்ள நீர் உந்து நிலையம் முதல் மாநகராட்சி எல்லை வரை உள்ள வழியோர குடிநீர் குழாய்கள், பம்புகள் ஆகியவற்ற இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மேற்காணும் பணிக்காக M/s. B.S.N & Co Salem ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணி ஆணை 22.11.2024–டன் முடிவடைய உள்ளது. ஏனவே, இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை (23.11.2024 முதல் 22.12.2024 வரை) 30 நாட்கள் ரூ. 49.00/–இலட்சத்தில் மேற்கொள்ள M/s. B.S.N & Co Salem ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2024–2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

(இ2/ம.எண்.810 /கு.நீ /2024–25)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**62)** சேலம் மாநகராட்சி அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் விடுபட்ட மற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளும் பணியினை நிறைவேற்றிட மாநில, மத்திய அரசு மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் Roc.No.29916/2024/WB Dated: 22.11.2024ன் வழிகாட்டுதலின்படி நகர அளவிலான செயல் திட்டக் குழு (City Climate Action Plan Committee) அமைத்து நடைமுறைப்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் குழுவில் கீழ்கண்டுள்ள விபரப்படி 12 எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் கொண்ட குழுவாக அமைத்திடவும், இக்குழு நகர காலநிலை செயல் திட்ட குழுமத்தில் உள்ளடக்கவும், ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒருமுறை கூடி காலநிலையை எதிர்க்கும் செயல்பாடுகளின் தேவை மற்றும் அவர்களின் நகரத்திற்கு நகர அளவிலான செயல் திட்டக் குழு (City Climate Action Plan Committee) தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவது மற்றும் அதை செயல்படுத்துவது போன்றவற்றை விவாதிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>தன்னார்வ தொண்டு நிறுவனர்கள் (NGOs)</u>

1. திரு.A. ஆனந்த், அழகுப் பூக்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனம்
2. திரு.G. செல்வராஜ், அழகுப் பூக்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனம்
3. திருமதி.L. வித்யாலட்சுமி, RAIN தன்னார்வத் தொண்டு நிறுவனம்.

<u>குடியிருப்பு நலச் சங்கங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு உறுப்பினர்கள் (Residential welfare associations elected body Member)</u>

1. சாமியப்பா நகர் சீலநாயக்கன்பட்டி
2. சோனா நகர், அழகாபுரம்
3. S.K. நகர், Residential welfare association, அம்மாபேட்டை

<u>மாமன்ற உறுப்பினர்கள் (Elected Body Members)</u>

1. திருமதி.பு.சீ. ஜெயஸ்ரீ, மாமன்ற உறுப்பினர்
2. திருமதி.செ. சுகாசினி, மாமன்ற உறுப்பினர்
3. திரு.வெ.தெய்வலிங்கம், மாமன்ற உறுப்பினர்

<u>நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலர்கள் ULB Officials</u>

1. மாநகர் நல அலுவலர், சேலம் மாநகராட்சி
2. மாநகர பொறியாளர், சேலம் மாநகராட்சி
3. செயற்பொறியாளர், மண்டல அலுவலகம்-1, சேலம் மாநகராட்சி

மேற்கண்ட 12 உறுப்பினர்களைக் கொண்ட நகர அளவிலான செயல் திட்டக் குழு (City Climate Action Plan Committee) அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(அம்ருத் 2.0/S2/12006/2021)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

63) சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கோட்டம் எண்37இல் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ‘‘குமரகிரி ஏரி’’ புனரமைக்கப்பட்டு 23.02.2024 அன்று முழு கொள்ளளவை எட்டியது. மேற்படி ஏரியை சுற்றுலாதலமாக மாற்றும் நோக்கில் பின்வரும் சிறப்பு மற்றும் பொது கட்டுப்பாடுகளின்படி ரூ.2,62,75,000 /– மதிப்பிலான பணிகள் சொந்த செலவில் மேற்கொண்டு சுற்றுலாவை மேம்படுத்துதல் சுகாதாரத்தை பேணிகாத்தல், சுற்றுசூழலை பாதுகாத்தல், மற்றும் குமரகிரி ஏரி 1434 ஆம் பசலி மீன்பிடி குத்தகை ஏலம் நடத்தி மாநகராட்சிக்கு வரி வருவாயை ஏற்படுத்தி தருதல் போன்ற பின்வரும் பொது மற்றும் சிறப்பு கட்டுப்பாடுகளுக்குட்பட்டு 03.10.2024 ஆம் தேதியன்று தினசரி நாளேட்டில் 18.10.2024 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி குமரகிரி ஏரி சுற்றுலாதலமாக மாற்றும் பணிகளுக்கான ஏலத்தில் எவரும் கலந்துக்கொள்ளவில்லை. மீன்பாசி குத்தகை ஏலம் மட்டும் நடைபெற்று மேற்படி மீன்பாசி குத்தகையை திரு.எம்.சீனிவாசன் த/பெ. மாணிக்கம் என்பவர் மட்டும் கலந்துக் கொண்டு ஏலம் கோரினார்.

மேற்படி கீழ்கண்ட விபரப்படி குமரகிரி ஏரி 1434 ஆம் பசலி மீன்பிடி குத்தகை ஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | அமைவிடம் | ஒப்பந்த வகைப்பாடு | ஒப்பந்ததாரர் பெயர் | முகவரி | அரசு நிர்ணயம் செய்யப் பட்ட தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | அதிகம் | குறைவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | குமரகிரி ஏரி | குமரகிரி ஏரி 1434 ஆம் பசலி மீன்பிடி குத்தகை ஏலம் | திரு.எம்.சீனிவாசன் த/பெ. மாணிக்கம் | 29ஏ.சி.கோபால் தெரு, கன்னங்குறிச்சி, சேலம்–636 008 | ரூ.27800 | ரூ.34000 | ரூ.6200 | – |

மேற்கண்டவாறு குமரகிரி ஏரி 1434 ஆம் பசலி மீன்பிடி குத்தகை ஏலம் ஒப்பந்த வகைப்பாடிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.எம்.சீனிவாசன் த/பெ. மாணிக்கம் மட்டும் கலந்து கொண்டு ஒப்பந்தம் கோரியுள்ளார். இதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டது. இந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட குமரகிரி ஏரி 1434 ஆம் பசலி மீன்பிடி குத்தகை ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ரூ.10000/– பிணை வைப்பு தொகை ரூ.100/– விண்ணப்பம் கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகையினை செலுத்தி மாநகராட்சி நிர்ணயம் செய்த குத்தகை தொகை ரூ.27800/– தொகையினை விட கூடுதலாக ரூ.6200/– வீதம் ரூ.34,000/– ஏலம் கோரியுள்ளார்.

மேற்படி குமரகிரி ஏரி 1434 ஆம் பசலி மீன்பிடி குத்தகையில் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் உயர்வு செய்து தொடர்ந்து புதுப்பிக்கவும் மேற்படி ஆண்டு குத்தகை ஆனது தொடர்ந்து முன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கது மேலும் தமிழ்நாடு மீனவர் நலவாரிய பங்களிப்பு தொகையாக 7சதவீதம் தொகையினை வசூல் செய்து THE MEMBER SECRETARY, TNFWB,CHENNAI என்ற பெயரில் கேட்பு வரைவோலை எடுத்து சேலம் மாநகராட்சி மூலம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் அடிப்படையில் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அங்கீகாரம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(எல்8/3955/2024)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

64) சேலம் மாநகராட்சி 2024–25ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.37–இல் செல்வ நகர் குறுக்கு தெருவில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை 2023–2024ம் ஆண்டு செந்தார விலைவிகித பட்டியல்படி தொழில்நுட்ப அங்கீகாரத்துடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.50/– இலட்சத்தில் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் 18.07.2024ஆம் தேதி வழங்கிய நிர்வாக அனுமதியின் பேரில், முதன் முறையாக 28.10.2024ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தபுள்ளி சதவீதம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. டி. வைத்தி (L 1) | ரூ. 3,75,588.37 | 0.06% மதிப்பீட்டை விட குறைவு | e Procurement Ref. No. 5885151173316, ரூ. 4,500/– நாள். 27.10.2024 UTR No. CPAEJYQGY5 SBI |
| 2 | மெசர்ஸ். கேஎஸ்ஆர் & கோ (L2) | ரூ. 3,79,588.13 | 1.00% மதிப்பீட்டை விட அதிகம் | e Procurement Ref. No. 5885151173329, ரூ. 4,500/– நாள். 27.10.2024 UTR No. CPAEJYQMS4 SBI |

மேற்காணும் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.டி.வைத்தி, சேலம் (L1) என்ற ஒப்பந்ததாரர் ரூ.3,75,588.37/– என மதிப்பீட்டை விட 0.06% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ8/ம.எண். 690ஆர் /2023–24)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**(ஒம்) ஆ, இராமச்சந்திரன்**
**மேயர்**
**சேலம் மாநகராட்சி.**

**சேலம்–1.**
26–11–2024.